Follow us:

# தமிழன்

THAMILAN தமிலன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 03, இதழ்: 113 சுபகிருது வருடம், கார்த்திகை மாதம் 12ஆம் திகதி திங்கட்கிழமை (28.11.2022) ஹிஜ்ரி 1444, ஜமா அதுல் அவ்வல் - 03, 0115 886187 - பக்கங்கள் 10

விலை ரூ.60

**கமெண்ட் கந்தர்...**

நல்ல அரசியல் கூட்டணிதான்.. ஜாடிக்கேற்ற மூடி..



**உஷ்**



முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய தற்போதைய ஜனாதிபதிக்கு தொலைபேசி அழைப்பொன்றை எடுத்தாராம்... "ரணில் ஐயா, நீங்கள் அருகில் வைத்திருக்கும் ஆட்கள் குறித்து கவனமாக இருங்கள். எனது அருகில் இருந்த ஆட்களால்தான் நான் விழுந்தேன். பாதுகாப்புச் செயலாளர், இராணுவத் தளபதி எல்லோரும் என்னால் நியமிக்கப்பட்டவர்கள். அவர்கள் என்னை காப்பாற்றாமல் கவிழ்க்கவே பார்த்தார்கள். நீங்களும் அந்த தவறை செய்யவேண்டாம். கவனமாக இருங்கள். தொலைவில் இருக்கும் எதிரிகளை விட பக்கத்தில் இருக்கும் துரோகிகளே மோசமானவர்கள்" என்று ரணிலுக்கு உபதேசம் செய்தாராம் கோட்டா. எல்லாம் பட்டறிவு தந்த பாடம்தான்...!

# பொதுஜன பெரமுன ஐ.தே.க. கூட்டணி!

## ரணில் - பெசில் தீர்க்கமான பேச்சு





*நமது விசேட செய்தியாளர்*

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியை இணைத் தலைமையாகக்கொண்டும் வேறு சில கட்சிகளின் ஆதரவுடனும் புதிய அரசியல் கூட்டணி ஒன்றை உருவாக்கும் முயற்சிகள் இடம்பெற்று வருகின்றன.

இது தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பெசிலுக்கும் இடையில் ஆரம்பகட்ட கருத்துப் பரிமாற்றம் இடம்பெற்றுள்ளது.

எதிர்வரும் பொதுத் தேர்தல் மற்றும் ஜனாதிபதித் தேர்தலை இலக்காகக் கொண்டு இந்தப் புதிய கூட்டணி அமைக் கப்படவுள்ளதாகவும், இதில் பொதுஜன பெரமுன மற்றும் ஐ.தே.க. நேரடியாக பங்களிப்பை செலுத்தவுள்ள அதேசமயம் ஏற்கனவே விலகிச்சென்ற ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் பொதுஜன பெரமுன எம்.பிக்களை உள்வாங்கவும் ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பிக்கள் பலரை உள்ளீர்க்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

02 பக்கம்



இராணுவத்தினரால் இடித்து அழிக்கப்பட்டு அதன் 51ஆவது படைப்பிரிவின் தலைமையகமாக இயங்கும் கோப்பாய் துயிலும் இல்லத்துக்கு முன்பாக மாவீரர் நாளான நேற்றைய தினம் வட மாகாண முன்னாள் உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் உள்ளிட்ட குழுவினர் சுடரேற்றி அஞ்சலி செலுத்தினர்.

# ரணில் ஹிட்லராக மொட்டு ஆதரவு!

### கூறுகிறார் தயாசிறி எம்.பி.



*கே.சுபானி*

ஹிட்லராக தயாராகிக்கொண்டிருக்கிறார் ரணில் விக்கிரமசிங்க. அவருக்கு அவ்வாறான எண்ணமிருப்பின், வெளிநாடொன்றில் ஓர் இடத்தை தெரிவுசெய்துகொள்ள வேண்டும் என ஸ்ரீலங்கா..

02 பக்கம்

# மாவீரர் தினத்தை குழப்பும் அரசு

### போலி துண்டுப்பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டதாக கஜேந்திரன் எம்.பி. கண்டனம்



*கனகராசா சரவணன்*

மட்டக்களப்பு, வாகரை, கொக்கட் டிச்சோலை பிரதேசத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி என்ற பெயரில் மாவீரர் தினத்தை குழப்புவதற்கு அரசாங்கத்தால் போலி துண்டுப்பிரசுரம்...

02 பக்கம்

# 04 இலட்சம் கிலோ பால்மா துறைமுகத்தில்

### மீண்டும் தட்டுப்பாடு ஏற்படும் அபாயம்



*கே.சுபானி*

நாட்டுக்கு இறக்குமதி செய்யப்பட்ட சுமார் 4 இலட்சம் கிலோ கிராம் பால்மா விடுவிக் கப்படாமல் கொழும்பு துறைமுகத்தில் தேக்கம டைந்துள்ளதுடன், அவற்றில் ஒரு இலட்சம் கிலோ கிராம் பால் மா காலாவதியாகும் திகதியை அண்மித்துள்ளதாக பால்மா...

02 பக்கம்

# சட்டவிரோதமாக பல்கலையில் தங்கியிருக்கும் மாணவர்கள்

### உடனடியாக வெளியேற்ற மானியங்கள் ஆணைக்குழு தீர்மானம்

*ம.சுசிகலா*

தமது கற்றல் கால எல்லையை கடந்துள்ள 05 வீதமான மாணவர்கள் பல்கலைக்கழகங்களுக்குள் தங்கியிருப்பதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. இது சட்டவிரோத செயல் என பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர்,

02 பக்கம்

# பெரிய வெங்காயத்தின் விலை குறைவடையும்

02 பக்கம்

# தாயை பாசத்துடன் கூட்டிவந்து அநாதரவாக்கிய பிள்ளைகள்

### ஹட்டனில் வழிதெரியாமல் தவித்த வயோதிபப் பெண்

*ம.சுசிகலா*

ஹட்டன் பகுதியில் நேற்று முன்தினம் இரவு பிள்ளைகளால் கைவிடப்பட்ட நிலையில், அநாதரவாக வீதியோரத்தில் இருந்த 65 வயதுடைய தாயொருவரை பிரதேசவாசிகள் ஹட்டன்...

02 பக்கம்

# நாளாந்தம் உயரும் உணவுப் பணவீக்கம்

### உலகில் ஆறாவது இடத்தில் இலங்கை

*கே.சுபானி*

உலகளாவிய ரீதியில் உணவுப் பொருட்களின் விலையேற்றம் காரணமாக உணவுப் பணவீக்கம்...

02 பக்கம்

# எச்.ஐ.வி. பரிசோதனைக்கு ஒன்லைனில் முன்பதிவு

*ம.சுசிகலா*

நாட்டில் எச்.ஐ.வி. பரிசோதனைகளை மேற்கொள்ள ஒன்லைனில் முன்பதிவு செய்துகொள்வதற்கான புதிய முறைமையை சுகாதார அமைச்சின் தேசிய பாலியல் நோய், எயிட்ஸ் தடுப்புப் பிரிவு ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

02 பக்கம்

# அரச கடன் நாளாந்தம் ரூ. 1,050 கோடி

*கே.சுபானி*

இலங்கை அரசாங்கம் தமது அன்றாட செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு சர்வதேசத்திடமிருந்து...

02 பக்கம்

# அரச செலவுகளை குறைக்க நடவடிக்கை

### புதிய சுற்றுநிருபம் வெளியீடு

*ம.சுசிகலா*

அரச செலவினங்களை இயலுமானவரை குறைக்குமாறு அனைத்து நிறுவனங்களுக்கும் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சினால் சுற்றுநிருபம் அனுப்பப்பட்டுள்ளது.

02 பக்கம்

# புலமைப்பரிசில் மாணவர்களுக்கு அனுமதி அட்டை கிடையாது

*க.கிருபாகரன்*

எதிர்வரும் டிசம்பர் மாதம் நடைபெறவுள்ள ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கு பரீட்சை அனுமதி அட்டை வழங்கப்பட மாட்டாது என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

பரீட்சை அனுமதிப்பத்திரத்திற்கு பதிலாக பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களின் வருகைப் பதிவுகளைக்கொண்ட முறைமை ஒன்று செயற்படுத்தப்பட...

02 பக்கம்



சிறிய, பெரிய அளவிலான வியாபாரங்களுக்கு குறைந்த வட்டிக் கடன்!

விவசாய, உற்பத்தி, சேவை மற்றும் வியாபார விற்பனைகளின் முதலீடு மற்றும் முகவர் நடவடிக்கையின் தேவைக்கமைய அதிகூடிய மீள்செலுத்தல் காலம்

ரூ.50 மில்லியன் வரை கடன் தொகையைப் பெறும் வசதி

வருடாந்த வட்டி வீதம் 6.5% முதல்

வருடாந்த முழு ஊதியம்

- ரூ.15 மில்லியன் வரை - 0112 481461 - ரூ.750 மில்லியன் வரை - 0112 481356

அல்லது அருகிலுள்ள கிளையை நாடுங்கள்.

*நிபந்தனைகள் உண்டு

www.peoplesbank.lk

1961 PEOPLE'S BANK CALL CENTRE

PEOPLE'S BANK

Pride of the Nation

AA- (lka) ஃபிட்ச் ரேட்டிங், AAA- பிராண்ட் ஃபினான்ஸ் ரேட்டிங்

மக்கள் வங்கியானது இலங்கை மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்டு, கண்காணிக்கப்படும் ஓர் வர்த்தக வங்கியாகும்.

## பொதுஜன...

பெசில் ராஜபக்ஷவுடன் இடம்பெற்ற இந்த கலந்துரையாடல் குறித்து இன்று மாலை 4.30 மணிக்கு நடைபெறவுள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் நிர்வாகக் குழுவில் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க விளக்கமளிக்கவுள்ளார்.

ஏற்கனவே இந்த விடயம் தொடர்பில் தமிழ், முஸ்லிம் அரசியல் கட்சிகளுடன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பேச்சு நடத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சட்டவிரோதமாக...

பேராசிரியர் சம்பத் அமரதுங்க தெரிவித்தார்.

அவ்வாறான மாணவர்களுக்கு எதிராக தேவையான நடவடிக்கைகளை எடுத்து அவர்களை வெளியேற்றுமாறு அனைத்து துணை வேந்தர்களுக்கும் பணிப்புரை வழங்கியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

நான்கு வருட பட்டப்படிப்பைப் பெறுவதற்கு பல்கலைக்கழகத்திற்குள் நுழையும் மாணவர்கள் குறித்த வருடங்களுக்குள் பட்டம் பெறாவிட்டால் பல்கலைக்கழகத்தில் தங்க முடியாது. 90 வீதமான மாணவர்கள் 4 வருட பட்டப்படிப்பிற்கு பதிவுசெய்து 04 வருடங்களில் பட்டப்படிப்பை முடித்துக் கொள்கின்றனர். எஞ்சியவர்கள் மேலும் 03 வருடங்கள் பட்டப்படிப்பை முடிப்பதற்கான வாய்ப்பைப் பெறுவார்கள்.

அதன்படி, இவ்வாறான மாணவர்கள் இனிமேல் பல்கலைக்கழகங்களில் தங்கியிருந்து பட்டப்படிப்பை முடிக்க முடியாது.

மேலும் வெளியில் இருந்து பரீட்சைக்கு தோற்றி பரீட்சை கட்டணம் உட்பட சகல செலவினங்களையும் அவர்களே ஏற்க வேண்டும். இலவசக் கல்விக்காக பல்கலைக் கழகத்திற்குள் நுழையும் மாணவர்களுக்கு 4 வருடங்களுக்கு விடுதிகள், நீர், மின்சாரம், கற்பித்தல் போன்ற வசதிகளை அரசாங்கம் ஏற்படுத்திக் கொடுக்கின்றது அதற்கு மேல் இந்த வசதிகள் வழங்கப்பட மாட்டாது.

4 வருடங்களின் பின்னர் மாணவர்கள் பட்டம் பெறாத பட்சத்தில் எஞ்சிய 3 வருடங்களுக்கு பல்கலைக்கழக அனுமதி மற்றும் ஏனைய வசதிகளை பல்கலைக்கழகத்தின் ஊடாக பெற்றுக்கொள்ள முடியாது.

அது தொடர்பில் அந்த பல்கலைக்கழகங்களின் நிர்வாக சபையே தீர்மானிக்கும் எனவும் அவர் தெரிவித்தார்.

ருஹுணு பல்கலைக்கழக மோதல் சம்பவத்தின் தொடர்ச்சியாகவே மேற்படி தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்நிலையில், காலி - அக்மீமன, ருஹுணு தேசிய கல்வியியல் கல்லூரியில் இடம்பெற்ற மோதலில் காயமடைந்த 14 பேர் கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ்துறையினர் தெரிவிக்கின்றனர்.

இந்த மோதல் சம்பவம் நேற்று முன்தினம் (26) இரவு இடம்பெற்றுள்ளது.

குறித்த கல்வியியல் கல்லூரியின் விடுதியில் தங்கியிருந்து விஞ்ஞான பீடத்தில் கல்வி கற்கும் மாணவர்கள் குழுவினரே இவ்வாறு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

முன்னதாக இந்தக் கல்லூரியில் பயின்றவர்களும், தற்போது பயிற்சி ஆசிரியர்களாக பாடசாலைகளில் இணைக்கப்பட்டுள்ள குழுவினரும் திடீரென விடுதிக்கு வந்து தம்மை தாக்கியதாக காயமடைந்த மாணவர்கள் தெரிவிக்கின்றனர்.

சம்பவம் தொடர்பில் அக்மீமன பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

நேற்று முன்தினம் இரவு சுமார் 50 பேர் கொண்ட குழுவினர் விஞ்ஞான பீடத்தின் பாதுகாப்பு வேலியை தாண்டி உள் நுழைந்ததாக ருஹுணு விஞ்ஞான பீடத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

## அரச செலவுகளைக்...

இந்த சுற்றுநிருபத்தை கட்டாயம் பின்பற்றுமாறு அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தனவால் அமைச்சுகள், திணைக்களங்கள் உள்ளிட்ட அரச நிறுவனங்களின் செயலாளர்களுக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. இந்த சுற்றுநிருபம் கடந்த வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் அரச நிறுவனங்களின் திறப்பு விழா உள்ளிட்ட ஏனைய வைபவங்கள், சம்மேளனங்கள் ஆகியவற்றுக்கு செலவு செய்யப்படக் கூடாது என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரைக்கமைய இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அறிவிக் கப்பட்டுள்ளது.

## அரச கடன்...

தினமும் ஆயிரத்து 50 கோடி ரூபா கடன் பெறவேண்டியுள்ளது என பேராதனை பல்கலைக்கழகத்தின் பொருளாதாரம் மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்தின் பேராசியரியர் வசந்த அத்துகோரள தெரிவித்துள்ளார்.

இது குறித்து பேராசிரியர் வசந்த அத்துகோரள மேலும் தெரிவித்துள்ளதாவது,

இவ்வாண்டின் அரச வருமானம் ரூ.653 கோடியாகவுள்ள நிலையில், அரச செலவினம் ரூ.1,705 கோடியாகவுள்ளது.

இதேவேளை, வரவு–செலவுத்திட்ட அறிக்கையின்படி, அடுத்த ஆண்டின் அரச வருமானம் ரூ.950 கோடியாக இருப்பதுடன், அரச செலவினம் 2 ஆயிரத்து 160 கோடி ரூபாவாக அதிகரிக்கும்.

வரி அறவீடுகளை அதிகரிப்பதன் மூலம் அடுத்த ஆண்டின் அரச வருமானம் அதிகரிக்கப்படவுள்ளது.

இதேவேளை, அடுத்த ஆண்டு நாளொன்றுக்கு அரசின் கடன்தொகை 1364 கோடி ரூபாவாக அதிகரிக்கும்.

அரசின் வருமானம் மற்றும் செலவினத்துக்கிடையிலான இடைவெளி பாரிய அளவில் அதிகரித்துள்ளது. இது அரசின் நிதிக் கொள்கை தவறான பாதையில் செல்வதை சுட்டிக்காட்டுகின்றது.

அரசாங்கம் இவ்வாண்டில் நபரொருவருக்காக நாளொன்றுக்கு 473 கோடி ரூபா கடன் பெற்றுள்ளது. இதேவேளை கடந்த ஆண்டு 371 கோடி ரூபாவையே பெற்றுக்கொண்டுள்ளது.

இந்நிலையில், நபரொருவருக்காக அரசாங்கம் அடுத்த ஆண்டு நாளொன்றுக்கு கடன் பெறவேண்டிய தொகை 609 கோடி ரூபாவாக அதிகரிக்கும் என பேராசிரியர் வசந்த அத்துகோரள சுட்டிக்காட்டியுள்ளார்.

## ரணில் ஹிட்லராக...

சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

இது குறித்து அவர் கொழும்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்,

ஹிட்லர் ஒருவர் நாட்டைவிட்டு ஓடிய விதம் உங்களுக்கு தெரியும். தற்போது மற்றுமொருவர் ஹிட்லர் ஆவதற்கு தயாராகிக் கொண்டிருக்கிறார்.

ரணில் விக்கிரமசிங்கவை நாங்கள் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரீதியிலேயே பார்த்தோம். அவருக்கு தற்போது ஹிட்லர் ஆவதற்கான ஆசை வந்துள்ளது.

அவர் ஹிட்லர் ஆவதற்கான ஆதரவை மொட்டுக்கட்சி வழங்கிக் கொண்டிருக்கிறது. பொதுஜன பெரமுன கொடுத்த அழுத்தம் காரணமாகவே அவர் ஹிட்லர் ஆகியுள்ளார். அவர் அப்படியானவர் இல்லை. அவர் நல்ல அரசியல் தலைவர் என்ற ரீதியிலேயே இருந்தார்.

அவருக்கு ஹிட்லர் ஆவதற்கான தேவையிருந்தால் அவர் வெளிநாடொன்றில் இடமொன்றைத் தேடிக்கொள்ள வேண்டும். அப்போதே அவரை தேடிப் பிடிக்க முடியும். - என்றார்.

## எச்.ஐ.வி. பரிசோதனைக்கு...

சிகிச்சை நிலையங்களுக்கு செல்வதற்குப் பதிலாக இந்த ஒன்லைன் முறையைப் பயன்படுத்த முடியும் என தேசிய பாலியல் நோய், எயிட்ஸ் நோய்த் தடுப்புப் பிரிவின் விசேட வைத்திய நிபுணர் நிமாலி ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

அதன்படி www.know4sure.lk என்ற இணையத்தளத்தில் எச்.ஐ.வி. பரிசோதனைக்கான முன்பதிவுகளை மேற்கொள்ள முடியும் என அவர் மேலும் தெரிவித்தார்.

## புலமைப்பரிசில்...

உள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இந்த ஆண்டுக்கான தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சை எதிர்வரும் டிசம்பர் மாதம் 18ஆம் திகதி இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பெரிய வெங்காயத்தின்...

விசேட வர்த்தகப் பொருட்களுக்கான வரி விகிதத்தை குறைப்பதற்கு உணவுக் கொள்கைகள் குழு கடந்த 24ஆம் திகதி கூடியபோது பரிந்துரை செய்தது.

அதற்கமைய, சந்தையில் பெரிய வெங்காயத்தை விலைக்கு வாங்குவதை அதிகரிப்பதற்கும் அதன் விலையை குறைப்பதற்கும் ஏதுவாக அமைந்தது.

வெங்காயத்துக்கான மொத்தத் தேவை ஆண்டுக்கு சுமார் 300,000 மெட்ரிக் தொன்னாகும். அத்தேவையானது முக்கியமாக (86 வீதம்) இறக்குமதி மூலமே நிறைவேற்றப்படுகின்றது. அதன்படி வெங்காயத்தின் தன்னிறைவு விகிதம் ஒரு ஆண்டுக்கான தேவையில் 14 வீதமாகும்.

நவம்பர் மாத மூன்றாவது வாரமளவில் இறக்குமதி செய்யப்பட்ட ஒரு கிலோ கிராம் பெரிய வெங்காயத்தின் சில்லறை விலை 290-390 ரூபாவாகும். அதேவேளை உள்ளூர் பெரிய வெங்காயத்தின் விலை ஒரு கிலோ கிராம் 340 தொடக்கம் 400 ரூபாவாக காணப்பட்டது.

நவம்பர் மாதம் மூன்றாவது வாரத்தில் இறக்குமதி செய்யப்பட்ட ஒரு கிலோ கிராம் வெங்காயத்தின் சராசரி விலை 95.30 ரூபாவாக காணப்பட்டதோடு 2022 ஓகஸ்ட் மாத நடுப்பகுதியில் அதன் விலைக்கு இணைந்ததாக சாதாரண அதிகரிப்பை மாத்திரமே காட்டியது.

2022ஆம் வருடம் செப்டெம்பர் மாதம் 22ஆம் திகதி முதல் அரசாங்கம் இறக்குமதி செய்யப்பட்ட ஒரு கிலோ பெரிய வெங்காயத்துக்கு குறிப்பிட்ட விசேட வர்த்தகப் பொருட்களுக்கான வரியை 10 ரூபா தொடக்கம் 50 ரூபா வரை அதிகரித்தது. அதனைத் தொடர்ந்து பெரிய வெங்காய இறக்குமதி பெருமளவு குறைந்தது.

ஓகஸ்ட் மாதத்தில் 27 ஆயிரத்து 889 மெட்ரிக் தொன்னாக காணப்பட்ட இறக்குமதி, நவம்பர் மாதம் (மூன்றாவது வாரமளவில்) 13,496 மெட்ரிக் தொன்னாக வீழ்ச்சியடைந்தது. இந்த வீழ்ச்சியினால் ஓகஸ்ட் மாதத்தில் இறக்குமதி செய்யப்பட்ட ஒரு கிலோ கிராம் பெரிய வெங்காயம் 175 ரூபாவிலிருந்து 328 ரூபா வரை அதிகரிக்கக் காரணமாக அமைந்தது.

எவ்வாறாயினும், நவம்பர் மாதம் 22ஆம் திகதியிலிருந்து ஒரு கிலோ கிராம் பெரிய வெங்காயத்தின் விலை 250 ரூபா வரை வீழ்ச்சியை காட்டியுள்ள போதும், விசேட வர்த்தகப் பொருட்களுக்கான வரி விகிதம் அதிகரிப்பதற்கான காலப்பகுதிக்கு இணைந்ததாக அதன் விலையிலும் அதிகரிப்பைக் காணமுடிகின்றது. ஓகஸ்ட் மாதத்தில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட பெரிய வெங்காயத்தின் CIF விகிதம் மிகக் குறைந்தளவே அதிகரித்துள்ளபோதும் இந்தத் திடீர் விலையேற்றத்துக்கு காரணம் செப்டெம்பர் மாதத்தில் மேற்கொள்ளப்பட்ட விசேட வர்த்தகப் பொருள்களுக்கான வரி விகித அதிகரிப்பேயாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

## 04 இலட்சம்...

இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இவ்வாறு இறக்குமதி செய்யப்பட்ட குறித்த பால் மா தொகையை சுங்கத் திணைக்களத்திலிருந்து விடுவிப்பதில் தாமதம் நிலவுவதாக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டை இலங்கை சுங்கத் திணைக்களம் நிராகரித்துள்ளது.

இது தொடர்பில் குறித்த நிறுவனங்கள் அந்நிய செலாவணியை சட்டவிரோதமாக கையாளுகின்றமை குறித்து 02 மாதங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட விசாரணை தொடர்ந்து முன்னெடுக்கப்படுவதாக தெரிவித்த சுங்கத்தின் ஊடகப் பேச்சாளர் சுதந்த சில்வா, இந்த விசாரணைகளை குழப்பும் வகையில் சம்பந்தப்பட்ட நிறுவனங்களை சேர்ந்தவர்கள் பொய்யான தகவல்களை வெளியிடுவதாக தெரிவித்தார்.

இதேவேளை, டொலர் பிரச்சினை உள்ளிட்ட காரணங்களால் பால் மா இறக்குமதி 50 வீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளதாக அமைச்சர் நளின் பெர்னாண்டோ குறிப்பிட்டார்.

இறக்குமதிக்கு தேவையான டொலரை பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக அமைச்சர் இதன்போது தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், கொழும்பு துறைமுகத்தில் கடந்த 10 வருடங்களாக பல்வேறு சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகள் காரணமாக சேமித்து வைக்கப்பட்டுள்ள பொருட்களை இரண்டு மாதங்களுக்குள் விடுவிக்குமாறு துறைமுக அதிகார சபை மற்றும் சுங்க திணைக்களத்திற்கு துறைமுகங்கள் மற்றும் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா பணிப்புரை விடுத்துள்ளார்.

கொழும்புத் துறைமுகத்திலுள்ள 108 கொள்கலன்கள் மற்றும் களஞ்சியசாலைகளை பார்வையிட்ட பின்னரே அமைச்சர் மேற்படி அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளார்.

## தாயை பாசத்துடன்...

பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

நாவலப்பிட்டி பேரலுகசின்ன பகுதியைச் சேர்ந்த இந்திராணி குசுமா (வயது 65) என்பவரே அநாதரவான நிலையில் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.


நாவலப்பிட்டி பிரதேசத்தில் வசிக்கும் குறித்த தாய், தனது பிள்ளைகளுடன் சிவனொளிபாதமலைக்கு வந்துள்ளார். பின்னர் பிள்ளைகள் அவரை ஹட்டன் நகரில் கைவிட்டுச் சென்றுள்ளனர்.

இந்நிலையில் தாய் வழிதெரியாமல் ஹட்டன் காமினிபுர பிரதேசத்தில் நேற்று முன்தினம் (26) இரவு வீதியோரம் தங்கியுள்ளார். இவர் வீதியோரத்தில் கிடப்பதைக் கண்ட பிரதேச மக்கள் தாயை ஹட்டன் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

நாவலப்பிட்டி பிரதேசத்தை வசிப்பிடமாகக் கொண்ட தாய் வழங்கிய தகவலின் அடிப்படையில் நாவலப்பிட்டி பொலிஸாரின் ஊடாக தாயின் உறவினர்களுக்கு அறிவிக்கப்பட்டதாக ஹட்டன் பொலிஸார் தெரிவித்தனர்.

எனினும் தாயை அழைத்துச்செல்ல உறவினர்கள் எவரும் முன்வராத பட்சத்தில் அவரை ஹட்டன் நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தி நீதவானின் உத்தரவுக்கமைய மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என ஹட்டன் பொலிஸார் தெரிவித்தனர்.

ஹட்டன் பொலிஸாரிடம் இருக்கும் குறித்த தாய் தொடர்பில் மேலதிக தகவல் தெரிந்தால் ஹட்டன் பொலிஸாருக்கு அறிவிக்குமாறு ஹட்டன் தலைமையக பிரதான பொலிஸ் பரிசோதகர் பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.



## மாவீரர் தினத்தை...

விநியோகிக்கப்பட்டுள்ளதாக தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் நேற்று ஞாயிற்றுக் கிழமை (27) விசேட ஊடக சந்திப்பு இடம்பெற்ற போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது,

இன்றைய நாள் (நேற்று) தமிழர்களுடைய சரித்திரத்தில் புனிதமான நாள். தமிழ் மக்களின் விடுதலைக்காக, தமிழ் மக்களின் இன அழிப்புகளை பாதுகாப்பதற்காக தன்னுயிர்களை தியாகம் செய்த எமது உறவுகளான மாவீரர்களை நினைவுகூரும் புனிதமான நாளாகும்.

துயிலும் இல்லங்கள் சிலவற்றை இராணுவத்தினர் ஆக்கிரமித்து நிலை கொண்டிருக்கின்ற காரணத்தினால் அங்கு சென்று அஞ்சலி செலுத்தமுடியாத நிலையில், அதற்கு அண்மையில் இருக்கக் கூடிய பகுதிகள் தயார்படுத்தப்பட்டு மக்கள் விளக்கு ஏற்றுவதற்காக அந்தந்தப் பகுதியில் இருக்க கூடிய பொது அமைப்புகள் மற்றும் பொதுமக்கள் இணைந்து ஏற்பாடு செய்துள்ளனர்.

இந்நிகழ்வுகளைக் குழப்புவதற்கு அரசாங்கத் தரப்பு தீவிரமாக ஈடுபட்டிருக் கின்றது. வடக்கு, கிழக்கு முழுவதிலும் அரச புலனாய்வுப் பிரிவினரது மறைமுகமான அச்சுறுத்தலும் நேரடியான அச்சுறுத்தலும் இராணுவத்தின் நேரடியான குழப்பங்களும் இருந்து கொண்டிருக்கின்ற ஒரு சூழலில் வாகரை - கொக்கட்டிச்சோலை பகுதிகளில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கட்சியின் பெயரில் போலியான துண்டுப்பிரசுரம் விநியோகிக்கப்பட்டுள்ளது.

மாவீரர் தினத்தை குழப்பு விரும்புகின்ற தரப்புகளால்தான் இது வெளியிடப்பட்டுள்ளது.

இந்த மாவீரர் தினத்தை ஆரம்பத்திலிருந்தே தடுப்பதற்கும் குழப்புவதற்கும் இலங்கை அரசு, இராணுவம், பொலிஸார், உளவுத்துறையினர் ஆகியோர் தீவிரமாக ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றனர். மறைமுகமாக மக்களை அச்சுறுத்திக் கொண்டிருக்கின்றனர்.

ஆனால் சர்வதேச நெருக்கடி காரணமாக இதனை தடைசெய்ய முடியாத நிலையில் மக்களை திசைதிருப்பி இதனைக் குழப்புவதற்கான ஒரு முயற்சியில் இந்த அரசாங்கம் தன்னுடைய எடுபிடிகள் ஊடாக ஈடுபட்டுக்கொண்டுள்ளது.

அரசாங்கத்தின் இந்த கோழைத்தனமான, கீழ்த்தரமான செயல்களை எங்கள் கட்சி மிக வன்மையாகக் கண்டிப்பதுடன், அரசாங்கம் தமிழ்களின் தேசத்தை அங்கீகரிக்க சுயநிர்ணய உரிமையிலான ஓர் அரசியல் தீர்வை எட்டுவதற்கு முயற்சி செய்வதை விடுத்து இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடக்கூடாது என்றார்.

## நாளாந்தம்...

அதிகமுள்ள நாடுகளின் பட்டியலில் இலங்கை ஆறாவது இடத்திலுள்ளதாக உலக வங்கியின் அண்மைய மதிப்பீட்டில் தெரியவந்துள்ளது.

உணவுப் பொருட்களின் விலையேற்றம் அதிகமுள்ள 10 நாடுகளின் பட்டியலை உலக வங்கி நேற்று வெளியிட்டுள்ளது.

இதில் பொருளாதார நெருக்கடிக்குள்ளாகியுள்ள இலங்கை உணவுப்பொருட்களின் 86 சதவீத உணவுப் பணவீக்கத்துடன் ஆறாவது இடத்திலுள்ளது.

இந்தப் பட்டியலில் 321 சதவீத உணவுப் பணவீக்கம் நிலவும் சிம்பாப்வே முதலிடத்திலுள்ளது. அதிக வறட்சியால் சிம்பாப்வேயில் பொருட்கள் மற்றும் சேவைகளின் விலை அதிகரித்துள்ளதாக அண்மைய ஆய்வுகளில் தெரியவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. மேலும், உணவுப் பணவீக்கத்தில் லெபனான் 208 வீதத்துடன் இரண்டாமிடத்திலும், 158 வீதத்துடன் வெனிசுவேலா மூன்றாம் இடத்திலும், துருக்கி 99 வீதத்துடன் நான்காம் இடத்திலும், ஆர்ஜென்டினா ஐந்தாவது இடத்திலும் உள்ளன. இதில் ஈரான் (84 சதவீம்), ருவண்டா (41 சதவீதம்), சுரினாம் (40 சதவீதம்), லாவோஸ் (39 சதவீதம்) ஆகிய நாடுகளை விடவும் இலங்கையின் உணவுப் பணவீக்கம் மோசமாகவுள்ளதாக உலக வங்கியின் ஆய்வறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# நாட்டின் திரிபு நிலையை மக்கள் ஆணை மூலம் சரிசெய்வோம்!

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் தெரிவிப்பு





ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கம், அரச பயங்கரவாதம், அரச மிலேச்சத்தனம் மற்றும் மக்களின் உரிமைகளையும், மக்களின் சுதந்திரத்தையும் தடுக்கவும், மனித உரிமைகளை மீறவும் முயற்சித்துக்கொண்டிருப்பதால் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இந்த அடக்குமுறைகளுக்கு மக்கள் அஞ்ச மாட்டார்கள் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் நீர்கொழும்பு தேர்தல் தொகுதிக் கூட்டம் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தலைமையில் நேற்றுமுன்தினம் (26) நடைபெற்றது.இந்நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வீதிகளில் ஆர்ப்பாட்டம் அல்லது அமைதிப் பேரணி நடத்த அனுமதி பெறவேண்டும் என அரசாங்கம் கூறினாலும் கூட, அரசாங்கம் சொல்வதை விட உயர்வான சட்டம் இருப்பதால், அரசாங்கத்தின் தன்னிச்சையான தலையீட்டை சவாலுக்குட்படுத்துவதற்காக இலட்சக்கணக்கான மக்களுடன் கூடிய விரைவில் வீதியில் இறங்குவோம் என எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக்காட்டினார்.

மக்கள் சக்தியால் அமைதியான முறையில் அரச கொடூரம் தோற்கடிக்கப்படும் எனவும், எந்தச் சூழ்நிலையிலும் அரச சொத்துகள், வீடுகள் அல்லது வேறெதுவும் அழிக்கப்படாது எனவும், நாடாளுமன்ற சிறப்புரிமைகள் என்ற போர்வையில் தம்பட்டம் அடிக்கும் குறித்த நபர்கள், மக்கள் முன் வாயை மூடிக்கொண்டு இருப்பது மக்கள் நிராகரிப்பதனால் எனவும் தெரிவித்தார்.

தற்போதுள்ள திரிபு நிலை அரசாங்கத்தை மாற்றியமைத்து நாட்டை ஸ்திர நிலைக்கு மீட்டெடுக்கும் வகையில் தேர்தலின் அவசியத்தை இதன்போது வலியுறுத்திய எதிர்க்கட்சித் தலைவர், நாட்டில் நடைமுறையிலுள்ள மேலான சட்டம் தொடர்பாக அரசாங்கம் புரிந்துகொள்ள வேண்டும் எனவும் தெரிவித்தார்.

அத்துடன், எதிர்வரும் கிட்டிய காலங்களில் மக்களின் ஆணையை வெளிப்படுத்த சந்தர்ப்பம் ஏற்படும் எனவும், அந்நேரத்தில் இந்த திரிபுபடுத்தப்பட்ட அரசாங்கம் வீட்டுக்கு அனுப்பப்பட்டு, மக்களின் அரசாங்கமொன்றை ஐக்கிய மக்கள் சக்தி ஸ்தாபிக்கும் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

கர்தினாலுக்கு எழுத்துப்பூர்வமாக அளித்த வாக்குறுதியின் மூலம் எந்த சர்ச்சையும் அல்லது செல்வாக்கும் இல்லாமல் தேசிய மற்றும் சர்வதேச நம்பகத்தன்மை கொண்ட விசாரணையொன்று ஈஸ்டர் தாக்குதல் தொடர்பாக நடத்தி, இதற்குக் காரணமான குற்றவாளிகள் எந்தத் தரத்தில் இருந்தாலும் தண்டிக்கப்படுவார்கள் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிட்டார்.

ஈஸ்டர் தாக்குதலில் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் நீதி நியாயம் கிடைக்க முன் நிற்பதாக தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், சிலர் தனக்கு எதிராக போலி மற்றும் சேறு பூசும் பிரசாரங்களை மேற்கொண்டு வருவதாகவும், இதற்கு தாம் ஒருபோதும் சளைக்கப்போவதில்லை எனவும் தெரிவித்தார்.

இந்நாட்டு மக்களின் பணத்தைக் கொள்ளையடித்த திருடர்கள் இன்று தமக்கு எதிராக சேறு பேசுகின்றனர் என தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், மத வழிபாட்டுத்தலங்களை கட்டுவதற்கு பணம் செலவழிப்பதை கொள்ளையடிப்பதாக அவர்கள் கருதுகின்றனர் எனவும் தெரிவித்தார்.

தான் பிரேமதாசவின் மகன் என்பதை நினைவுகூர்ந்த எதிர்க்கட்சித் தலைவர், தான் மக்களின் பணத்தில் ஒரு சதத்தையேனும் திருடவில்லை என்பது முழு நாட்டிற்கும் தெரியும் எனவும் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் நீர்கொழும்பு தேர்தல் தொகுதி அமைப்பாளர் நாடாளுமன்ற உறுப்பினர் வைத்தியர் காவிந்த ஜயவர்தனவினால் ஏற்பாடு செய்யப்பட்ட இக்கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்பட பெருந்திரளான கட்சி ஆதரவாளர்கள் கலந்துகொண்டிருந்தனர்.

# தேசிய கொள்கைத் தயாரிப்பின்போது பல்கலைகளை இணைத்துக்கொள்ளல்

## கொள்கை தயாரிப்பு தொடர்பான தேசிய பேரவையின் உப குழுவில் கலந்துரையாடல்



தேசிய கொள்கைத் தயாரிப்பு தொடர்பில் துணைவேந்தர்கள் ஊடாக பல்கலைக்கழக கல்விசார் ஊழியர்களின் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்ளும் எதிர்காலத் திட்டம் குறித்த ஆரம்பகட்ட கலந்துரையாடல்கள் அண்மையில் நாடாளுமன்றத்தில் இடம்பெற்றது.

குறுகிய, நடுத்தர மற்றும் நீண்டகால கொள்கைத் தயாரிப்புக்கான முன்னுரிமைகளை அடையாளம் காண்பதற்கான தேசிய பேரவையின் உப குழு, அதன் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தலைமையில் நாடாளுமன்றத்தில் அண்மையில் கூடியபோதே இது தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க, நாட்டிலுள்ள பல்கலைக்கழகங்களின் உப வேந்தர்கள் உள்ளிட்ட விரிவுரையாளர்கள் பலர் கலந்துகொண்டிருந்த இக்கூட்டத்தில் குறுகிய, நடுத்தர மற்றும் நீண்டகால கொள்கைத் தயாரிப்புக்கான முன்னுரிமைகளை அடையாளம் காண்பதற்கான தேசிய பேரவையின் உப குழுவினால் அடையாளம் காணப்பட்டுள்ள துறைகளுக்கான ஆரம்பகட்ட கலந்துரையாடல்களை நடத்த இணக்கம் காணப் பட்டது.

இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் முன்னோடியாக, கொள்கைகள் தயாரிக்கப்படவேண்டிய முக்கிய துறைகள் குறித்து பேராசிரியர் கிருஷான் தெஹரகொட குழுவுக்கு விளக்கமளித்தார். இதில் கலந்துகொண்ட பல்கலைக்கழகத் துணைவேந்தர்கள் மற்றும் விரிவுரையாளர்கள் இந்த நாட்டில் எவ்வாறு கொள்கைகள் தயாரிக்கப் பட வேண்டும் என்பது குறித்து கருத்துகளை முன்வைத்தனர்.

இதற்கமைய முன்னுரிமை அடிப்படையில் அந்தந்தத் துறைக்கான பல்கலைக்கழக விரிவுரை யாளர்களை இணைத்துக்கொண்டு குறுகிய, நடுத்தர மற்றும் நீண்டகால கொள்கைத் தயாரிப்புக்கான முன்னுரிமைகளை அடையாளம் காண்பதற்கான தேசிய பேரவையின் உப குழுவினால் எதிர்கால நடவடிக்கைகளை முன்பெடுப்பதற்கும் இங்கு தீர்மானம் எடுக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் அமைச்சர் நசீர் அஹமட், இராஜாங்க அமைச்சர் சுரேன் ராகவன், நாடாளுமன்ற உறுப்பினர்களான ஏ.எல்.எம். அதாஉல்லா, பவித்ரா வன்னியாராச்சி, விஜித அபேவர்தன மற்றும் சாகர காரியவசம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# சிறுவர்களுக்கான "கதை கூறும் நிகழ்வு"

(சாவகச்சேரி நிருபர்)

ஐந்து தொடக்கம் பத்து வயதிற்கு உட்பட்ட சிறுவர்களுக்கான 'கதை கூறும் நிகழ்வு' எதிர்வரும் முதலாம் திகதி (01) யாழ்ப்பாணம் ரக்கா வீதி நல்லூரில் அமைந்துள்ள பிரிட்டிஷ் கவுன்சிலில் இடம்பெறவுள்ளது.

எனவே, குறித்த நிகழ்வில் கலந்துகொள்ள ஆர்வமுள்ள சிறுவர்கள் பிரிட்டிஷ் கவுன்சிலின் வலைத்தளம் ஊடாகவோ அல்லது நேரடியாக அலுவலகத்திற்கு சென்றோ முன்பதிவுகளை மேற்கொண்டு பயனடைய முடியும்.

# அறுவரின் நியமனங்களுக்கு உயர் பதவிகள் பற்றிய குழுவில் அனுமதி

நான்கு அமைச்சுகளின் செயலாளர்கள், நிறுவனத்தின் தலைவர் மற்றும் தூதுவர் ஒருவரின் நியமனங்களுக்கு உயர் பதவிகள் பற்றிய குழுவில் அண்மையில் அனுமதி வழங்கப்பட்டிருப்பதாக நாடாளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தசநாயக்க தெரிவித்தார்.

இதற்கமைய ஐக்கிய அரபு இராச்சியத்துக்கான புதிய இலங்கைத் தூதுவராக உதய இந்திர ரத்னவை நியமிப்பதற்கு உயர் பதவிகள் பற்றிய குழுவின் அனுமதி வழங்கப்பட்டது.

அத்துடன், சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சின் செயலாளராக சூலானந்த பெரேராவை நியமிப்பதற்கும், வெளிநாட்டு அமைச்சின் செயலாளராக திருமதி அருணி விஜேவர்தனவை நியமிப்பதற்கும், கைத்தொழில் அமைச்சின் செயலாளராக ஜே.எம்.டி.ஜெயசுந்தரவை நியமிப்பதற்கும், தொழில்நுட்ப அமைச்சின் செயலாளராகப் பேராசிரியர் என்.டி.குணவர் தனவை நியமிப்பதற்கும் இதில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அதேநேரம், இலங்கை வங்கியின் தலைவராக காஞ்சன ரத்வத்தவை நியமிக்கவும் உயர் பதவிகள் பற்றிய குழுவில் அனுமதி வழங்கப்பட்டிருப்பதாக செயலாளர் நாயகம் தெரிவித்தார்.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நடைபெற்ற நாடாளுமன்ற உயர் பதவிகள் பற்றிய குழுவில் அமைச்சர்களான நிமல் சிறிபால.த சில்வா, கெஹலிய ரம்புக் வெல்ல, விதுர விக்ரமநாயக்க, நாடாளுமன்ற உறுப்பினர்களான சமல் ராஜபக்ஷ, ஜோன் செனவிரத்ன, தலதா அத்துகோரல, (வைத்திய கலாநிதி) சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே, ரிஷாட் பதியுதீன், உதய கம்மன்பில மற்றும் தர்மலிங்கம் சித்தார்த்தன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# காலியில் கல்லூரி மாணவர் மோதலில் 11 பேர் காயம்

காலி, அக்மீமன, ருஹுணு தேசிய கல்வியியற் கல்லூரியில் நேற்றுமுன்தினம் (26) இரவு இடம்பெற்ற மோதலில் 11 பேர் காயமடைந்து கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

குறித்த கல்வியியற் கல்லூரியின் விடுதியில் தங்கியிருந்து கல்வி கற்கும் மாணவர்கள் குழுவினரே இவ்வாறு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

முன்னதாக இந்த கல்லூரியில் பயின்றவர்களும், தற்போது பயிற்சி ஆசிரியர் களாக பாடசாலைகளில் இணைக்கப்பட்டுள்ள குழுவினரும் திடீரென விடுதிக்கு வந்து தம்மை தாக்கியதாக காயமடைந்த மாணவர்கள் தெரிவிக்கின்றனர்.

சம்பவம் தொடர்பில் அக்மீமன பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# தலதா மாளிகைக்கு மின் கட்டண நிவாரணம்

வரலாற்றுச் சிறப்புமிக்க ஸ்ரீ தலதா மாளிகையில் கடந்த ஒக்டோபர் மாதத்திற்கான மின்சாரக் கட்டணமான 27 இலட்சம் ரூபாவை செலுத்துவதற்கு பொதுப் பயன்பாடுகள் ஆணைக் குழுவால் நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது.

பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் அண்மையில் மத ஸ்தலங்களுக்கு நிவாரணம் வழங்கப்படும் என அறிவித்திருந்தார்.

அதன்படி, மத வழிபாட்டுத் தலங்களில் சுமார் 50 வீத மின் கட்டணத்தைக் குறைக்க முடிவு செய்யப்பட்டது.

தலதா மாளிகையின் கடந்த மாதத்திற்கான மின்சாரக் கட்டணம் 13 இலட்சம் ரூபாவாக குறைக்கப்பட்டுள்ளதுடன், அதனை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தியவதன நிலமே தெரிவித்தார்.

# சாமிக்க கருணாரத்ன தேசிய அணியில் இன்மை தொடர்பில் எழுத்துமூல அறிக்கை பெறவும்

## விளையாட்டுத்துறை அமைச்சர் விளையாட்டுப் பணிப்பாளர் நாயகத்துக்கு ஆலோசனை

- தேசிய கிரிக்கெட் அணிக்கு வீரர்களைத் தேர்ந்தெடுக்கும்போது மதசார் குழுவொன்றின் செல்வாக்கு காணப்படுகின்றதா?
- கடந்த உலகக்கிண்ணப் போட்டிகளில் கலந்துகொண்ட அதிகாரிகளுக்கு அனைத்து வசதிகளுடனும் ஒரு நாளைக்கு 800 டொலர் வழங்கப்பட்டுள்ளது.
- பெல்வூட்டை, ஹொலிவூட் மற்றும் பொலிவூட் நிலைமைக்கு அபிவிருத்தி செய்ய நடவடிக்கை



கடந்த இரண்டு கிரிக்கெட் போட்டிகளிலும் தொடரின் நாயகனாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட சாமிக்க கருணாரத்ன கிரிக்கெட் தரப்படுத்தலில் இரண்டாவது இடத்தில் இருக்கும் நிலையில், அவரை தேசிய அணிக்கு தேர்ந்தெடுக்காமை தொடர்பில் கிரிக்கெட் தெரிவுக்குழுவிடம் எழுத்துமூல விளக்கமொன்றை கோருமாறு விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சர் ரொஷான் ரணசிங்க அமைச்சின் அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார்.

இலங்கை கிரிக்கெட் அணிக்கு வீரர்களை தேர்ந்தெடுக்கும்போது மதசார் குழுவொன்றுக்குச் சொந்தமான வீரர்களை மாத்திரம் தேர்ந்தெடுப்பதாக ஒரு கருத்துக் காணப்படுவதாகவும், கடந்த காலங்களில் திறமைகளை வெளிக்காட்டிய கிரிக்கெட் வீரர் சாமிக கருணாரத்னவை தேசிய அணிக்குத் தேர்ந்தெடுக்காமை குறித்த மதக் கொள்கைக்கு இணங்காமையே காரணம் என ஒரு கருத்து இருப்பதாகவும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகாரங்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு, அதன் தலைவர் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சர் ரொஷான் ரணசிங்கவின் தலைமையில் அண்மையில் (22) நாடாளுமன்றத்தில் கூடியபோதே இந்தக் கருத்துகள் முன்வைக்கப்பட்டன.

கடந்த உலகக்கிண்ணக் கிரிக்கெட் போட்டியில் கலந்துகொள்வதற்காக ஸ்ரீலங்கா கிரிக்கெட் நிறுவனத்தின் அனுசரணையில் வெளிநாடு சென்ற அதிகாரிகள் தொடர்பில் கண்டறியப்பட வேண்டுமென இங்கு கருத்துத் தெரிவிக்கப்பட்டது. அனைத்து வசதிகளுடனும் ஒரு நாளைக்கு 800 டொலர் நிதி ஒருவருக்கு செலுத்தப்பட்டுள்ளதுடன், அதிகாரிகள் அல்லாத தரப்பினரும் இந்த வசதியின் கீழ் சுற்றுலாவில் கலந்துகொண்டுள்ளதாகவும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குறிப்பிட்டனர்.

அதேபோன்று, ரி20, ரி10 மற்றும் எல்.பி.எல். போட்டிகளை மேற்கொள்ளும்போது நிதிப் பயன்பாடு தொடர்பில் முறையான ஒழுங்குபடுத்தலொன்று விளையாட்டு அமைச்சின் தலையீட்டில் நடைபெற வேண்டும் எனவும் உறுப்பினர்கள் இதன்போது சுட்டிக்காட்டினர்.

பெல்வூட் நுண்கலைக் கல்லூரியை பெல்வூட் ஈஸ்தடிக் அகடமியாக என்.வி.கியூ.ஆர்.6 சர்வதேச அங்கீகாரத்துடன் சான்றிதழ் வழங்க அபிவிருத்தி செய்வதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

தற்பொழுது காணப்படும் பாடங்களுக்கு மேலதிகமாக நடிப்பு, மாறுவேடம், தொலைக்காட்சி மற்றும் சினிமா தயாரிப்பு தொழில்நுட்பம் போன்ற பாடங்களையும் புதிதாக இணைக்க நடவடிக்கை எடுப்பதாகவும் அதற்கான அனைத்துத் தொழில்நுட்ப உபகரணங்களுடன் கூடிய கலையரங்குத் தொகுதியொன்றை நிர்மாணித்து 2023இல் அதனை ஹொலிவூட் மற்றும் பொலிவூட் நிலைமைக்கு உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

இங்கு, பெல்வூட் நிறுவனத்தின் மாணவர்கள் தற்பொழுது முகங்கொடுக்கும் சிக்கல்கள் பல காணப்பட்டதாகவும், விசேடமாக முழுநேர அதிபர் இல்லாமை, உணவுப் பிரச்சினை, போக்குவரத்து சிக்கல்கள் தொடர்பில் அமைச்சரினால் கவனம் செலுத்தப்பட்டு நடவடிக்கை எடுத்துள்ளமை தொடர்பில் உறுப்பினர்கள் நன்றிகளை தெரிவித்தனர்.

பெல்வூட் நுண்கலைக் கல்லூரி அமைந்துள்ள 50 ஏக்கர் காணியிலுள்ள 4 மாடிக் கட்டடம் 2015 - 2019 காலப்பகுதியில் இருந்த தலைவரினால் உடைத்து அகற்றப்பட்டுள்ளமை தொடர்பில் விரைவாகக் கண்டறிந்து அதற்கெதிராக சட்ட நடவடிக்கை எடுக்குமாறு அதிகாரிகளுக்கு அமைச்சர் ஆலோசனை வழங்கினார்.

இலங்கையில் காணப்படும் சர்வதேச தரம் வாய்ந்த ஒரேயொரு ஹொக்கி விளையாட்டரங்கின் மைதானத்தை முறையாகப் பராமரிக்காமை காரணமாக உரிய தரத்தில் இல்லாமை குறித்து இங்கு கலந்துரையாடப்பட்டது. அதனைப் புனரமைத்து ஹொக்கி விளையாட்டுக்காக பேணுவதன் அவசியம் குறித்து உறுப்பினர்கள் இதன்போது கருத்துத் தெரிவித்தனர். 50 வீத நிதிப் பங்களிப்பை இலங்கை ஏற்பதன் அடிப்படையில் ஆசிய ஹொக்கி சம்மேளனத்தினால் அதனை அபிவிருத்திசெய்ய இணங்கியுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

அதேபோன்று, தியகம விளையாட்டரங்கின் செயற்கை ஓடுபாதை சேதமடைந்துள்ளமை குறித்தும் இங்கு கருத்துத் தெரிவிக்கப்பட்டதுடன், அதனால் சுகததாச விளையாட்டரங்கு அல்லாமல் பயிற்சி பெறுவதற்கு ஓடுபாதையொன்று இல்லை என உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினர்.

மஹரகம இளைஞர் சேவைகள் மன்றத்தின் உள்ளக விளையாட்டரங்கு முறையாகப் பராமரிக்கப்படாமையினால் மழை காலத்தில் நனைவதால் சேதமடைந்துள்ளமை பற்றியும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

ஜப்பானிய உதவி மற்றும் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி நிர்மாணிக்கப்பட்ட இந்தக் கட்டடத்தைப் புனரமைப்பு செய்வதற்கு ஜப்பானிய தூதரகத்துடன் கலந்துரையாடல் மேற்கொண்டு வருவதாக இளைஞர் சேவைகள் மன்றத்தின் தலைவர் குறிப்பிட்டார். அதேபோன்று, இளைஞர் சேவைகள் மன்றத்தினால் ஈட்டப்படும் வருமானத்தை அதன் பராமரிப்புக்குப் பயன்படுத்துமாறு அமைச்சர் ஆலோசனை வழங்கியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மாகாண சபைகள் செயற்படாமையால் மாகாண மற்றும் பிரதேச விளையாட்டுகள் பாதிக்கப்பட்டு வருவது தொடர்பிலும் இங்கு கவனத்திற்கொள்ளப்பட்டதுடன், அது தேசிய ரீதியில் விளையாட்டு வீரர்கள் உருவாகுவதில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துவதனால் இது தொடர்பிலும் அமைச்சரின் கவனத்தை செலுத்துமாறு உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்தனர். நாடுபூராகவும் காணப்படும் பல்வேறு விளையாட்டு சம்மேளனங்களின் செயற்பாடுகளை ஒழுங்குபடுத்தும் வேலைத்திட்டமொன்றை விளையாட்டுத்துறை அமைச்சினால் ஆரம்பிக்க வேண்டும் எனவும் இங்கு கருத்துத் தெரிவிக்கப்பட்டது.

விளையாட்டு சங்கங்களை குழுவில் அழைத்து கலந்துரையாடுவது தொடர்பிலும் இங்கு கருத்துகள் முன்வைக்கப்பட்டதுடன், அது தொடர்பான எதிர்கால நடவடிக்கைகளை எடுக்குமாறு குழுவின் தலைவர் குழுவின் செயலாளருக்கு ஆலோசனை வழங்கினார்.

இந்தக் கூட்டத்தில் இராஜாங்க அமைச்சர் ரோஹன திசாநாயக்க நாடாளுமன்ற உறுப்பினர் களான சரத் வீரசேகர, காவிந்த ஜயவர்தன, நலின் பண்டார, குணதிலக ராஜபக்ஷ, உபுல் மஹேந்திர ராஜபக்ஷ, ஜகத் சமரவிக்ரம, வீரசுமன வீரசிங்க, சம்பத் அத்துகோரல, சிந்தக்க மாயாதுன்ன, வருண பிரியந்த லியனகே, மொஹமட் முசம்மில், முஜிபுர் ரஹ்மான் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சு உள்ளிட்ட சம்பந்தப்பட்ட நிறுவனங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

# 2023 ஏப்ரல் இறுதியில் சாதாரண தரப் பரீட்சை

2022ஆம் ஆண்டு க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைகள் எதிர்வரும் 2023ஆம் ஆண்டு ஏப்ரல் மாத இறுதியில் அல்லது மே மாத முதல் வாரத்தில் நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளதாக கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

2021ஆம் ஆண்டு சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகள் குறித்து நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இவ்வாண்டு நடந்துமுடிந்த சாதாரண தரப் பரீட்சைகளில் 74 வீதமானோர் சித்திபெற்றுள்ளனர் எனவும் இதன்போது அமைச்சர் தெரிவித்தார்.

மேலும் சாதாரண தரப் பரீட்சை வினாத்தாள் திருத்தும் பணிகளில் ஈடுபட்ட ஆசிரியர்களுக்கான கொடுப்பனவுகளை வழங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அத்தோடு அந்நியசெலாவணி பற்றாக்குறையால் பாடப்புத்தகங்களை அச்சிடுவதில் சிரமம் ஏற்பட்டுள்ளது. எனினும், இந்திய கடனுதவியூடாக தனியார் துறை பங்களிப்புடன் அதனை முறையாக முடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் இதன்போது மேலும் தெரிவித்தார்.

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42,
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2022, நவம்பர் 28ஆம் திகதி, திங்கட்கிழமை

# தமிழ்த் தரப்புகளின் முன்னுள்ள பொறுப்பு

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான அதிகாரப்பகிர்வு குறித்துப் பேச்சு நடத்துவதற்கு எதிர்வரும் டிசம்பர் 12ஆம் திகதிக்குள் அனைத்துக் கட்சிக் கூட்டமொன்றை நடத்தவுள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அறிவித்துள்ளார்.

ஜனாதிபதி, இந்த ஆண்டு இறுதிக்குள் தமிழர் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்படும் என்று முதலில் கூறியிருந்தார். பின்னர் அவர், அடுத்த சுதந்திர தினத்துக்குள் அரசியல் தீர்வு காணப்படும் என்றும் கூறினார். நாடாளுமன்றத்தில் வரவு-செலவுத் திட்டத்தின் குழுநிலை விவாதத்தின்போது இப்போது ஜனாதிபதி இந்த அறிவிப்பை வேறொரு கோணத்தில் வெளியிட்டிருக்கிறார்.

தென்னிலங்கை அரசியலில் மிக முக்கிய புள்ளி ஜனாதிபதி ரணில். அவரின் அறிவிப்பு என்பது எடுத்த எடுப்பில் தமிழர்களுக்கு சாதகமான ஒன்றுபோல தெரிந்தாலும், அதனை தமிழ்த் தரப்பு நிதானமாக கையாளவேண்டிய தேவை இருக்கிறது.

தமிழ்த் தரப்புகள் இருப்பதைத் தக்கவைத்துக் கொண்டுதான் எதிர்காலம் குறித்துப் பேசவேண்டும். அதுதான் சரியான முறைமையாக இருக்கும். ஒருபுறம் அடித்துப் பிடித்துச் சூறையாடிக் கொண்டிருக்கும் தரப்புடன், அதனை அனுமதித்துக் கொண்டு, மறுபுறத்தில் சமரசம் செய்ய முடியாது. பேச இயலாது.

தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் முயற்சிகளில் பங்குபற்றுவது தொடர்பில் தமிழ்த் தேசியக் கட்சிகள் நேற்று ஒன்றுகூடி மேற்கொண்ட தீர்மானத்தின் பின்புலத்தில் இந்த அம்சம்தான் பிரதானமாக அமைந்துள்ளது.

ஒருபுறம் 13ஆம் திருத்தத்தை முழு அளவில் நடைமுறைப் படுத்த வேண்டும் என்று வலியுறுத்திக் கொண்டு, மறுபுறம் தமிழர் தாயகத்துக்கு உள்ளக சுயநிர்ணய உரிமையுடன் கூடிய சமஷ்டித் தீர்வை வலியுறுத்துவது ஒன்றுக்கொன்று முரண்பாடான நிலை அல்லவா? அனைத்துத் தமிழ் கட்சிகளையும் இணைப் பதற்காக இப்படி முரண்பட்ட கருத்துகளை ஒன்று சேர்த்து ஓர் இணக்கப்பாட்டுக் கோரிக்கைக்குத் தமிழ்க் கட்சிகள் வரவேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளதா என்ற கேள்வி சில தரப்புகளால் எழுப்பப்படுகின்றது.

தமிழ்த் தேசியக் கட்சிகள் மேற்படி தேசியப் பிரச்சனைக்குத் தீர்வு காண்பது தொடர்பில் பூர்வாங்க இணக்கம் காணப்பட்ட அம்சங் கள் என்று குறிப்பிட்ட மூன்று விடயங்களையும் ஒரு சீர்பட நோக்குவோர் மனதில் இத்தகைய கேள்விகள் எழுவது தவிர்க்க முடி யாததே. ஆனால், அந்த மூன்று அம்சங்களில் முதலிரண்டும் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் உடனடி, அவசரப் பிரச்சினைகள் சம்பந்தப் பட்டவை. அதனால் முதலிரண்டையும் உடனடியாகச் செய்ய வலியுறுத்திய தமிழ்க் கட்சிகள், மூன்றாவதாக தீர்வு குறித்து பேசலாம் என்ற சாரப்பட அந்த அறிவிப்பை விடுத் திருக்கின்றன. இந்தப் பின்புலத்தில் அந்த மூன்று அம்சத் திட்டங் களை நோக்கினால் அதன் தாற்பரியம் புரியும்.

1. நில அபகரிப்பு நிறுத்தப்பட்டு, அபகரிக்கப்பட்ட நிலங்கள் உடனடியாக விடுவிக்கப்பட வேண்டும்.

2. அதிகாரப் பகிர்வு சம்பந்தமான அரசமைப்பு மற்றும் சட்டங்கள் அமுல்படுத்தப்பட்டு மாகாண சபைத் தேர்தல்கள் உடனடியாக நடத்தப்பட்ட வேண்டும்.

3. உள்ளக சுயநிர்ணய அடிப்படையில் தமிழ் மக்கள் சரித்திர ரீதியாக வாழ்ந்து வந்த வடக்கு - கிழக்குப் பிரதேசத்தில் சமஷ்டி அடிப்படையில் அதியுச்ச அதிகாரப் பகிர்வுடனான புது அரசமைப்பு உருவாக்கப்பட வேண்டும். இந்த ஒழுங்குமுறையை நாட்டின் ஏனைய பகுதிகளிலும் நடைமுறைப்படுத்துவதை நாம் வரவேற்கிறோம்.

இவைதான் அந்த மூன்று அம்சங்கள்.

முதலிரண்டும் பேச்சுக்கான முன் நிபந்தனைகளாக முன்வைக்கப்படாவிட்டாலும் இந்த சமரச முயற்சி முன்னகர்வதற்கான களச்சூழலை ஏற்படுவதற்கு அவை அவசியமானவை.

தமிழ்க் கட்சிகளின் இந்த நியாயமான கோரிக்கை தொடர்பில் அரசுத் தலைமை காட்டக்கூடிய பிரதிபலிப்பை வைத்து, இந்த முயற்சியின் முன்னகர்வு குறித்து எதிர்வு கூற முடியும்.

மாவீரர் வார அனுஷ்டிப்புகள் கடந்த சில தினங்களாக நடந்தபோது கடந்த காலங்களைப் போல் பாரிய எதிர்ப்புகள் எதுவும் வரவில்லை என்பதை அவதானிக்க முடிகிறது. போராளிகளின் குடும்பங்கள் தங்கள் விருப்பத்தின்படி உயிர்களை ஈகம் செய்த உறவுகளை நினைவுகூர்ந்தனர். தமிழர்களின் நம்பிக்கையைப் பெற ரணில் மேற்கொண்ட முதல் உத்தியாக இது இருக்கக்கூடும். ஆனால், அந்நிகழ்வுகளுக்கு ரணில் அனுமதி வழங்கத் தேவையில்லை. தம் உறவுகளை நினைவுகூர்வது தமிழர்தம் கடமை. தமிழர் உரிமைகளை தருகிறோம் என்பதைவிட தமிழர்களுக்கு சுதந்திரத்தை, அவர்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்ய வேண்டியதே இலங்கை அரசாங்கத்தின் முன்னுள்ள மிகப்பெரிய பொறுப்பு. அதற்கேற்ற வகையில் காய்களை நகர்த்த வேண்டும் தமிழ்த் தரப்புகள்.

## இன்றைய நாளில்...

* 1814 – லண்டனின் 'தி டைம்ஸ்' நாளிதழ் நீராவியால் இயக்கப்படும் அச்சு இயந்திரத்தைக் கொண்டு முதன்முதலாக வெளியிடப்பட்டது.

* 1848 – மாத்தளை கழகத் தலைவரும், கண்டி இராச்சியத்திற்கு உரிமை கோரியவருமான கொங்கா லேகொட பண்டாவிற்கு மரண தண்டனை விதித்துத் தீர்ப்பளிக்கப்பட்டது.

* 1964 – நாசா செவ்வாய்க் கிரகத்தை நோக்கி மரைனர்-4 விண்கலத்தை ஏவியது.

* 2006 – நாசாவின் நியூ ஹரைசன்ஸ் தானியங்கி விண்கலம் புளூட்டோவின் முதலாவது படத்தை அனுப்பியது.

# முட்டையொன்றின் விற்பனை விலையைக் கணித்து ஒரு வாரத்துக்குள் அரச நிதிக்குழுவுக்கு அறிவிக்குமாறு பணிப்பு

★ 2010ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க சீட்டாட்டத் தொழில் (ஒழுங்குபடுத்தல்) சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிக்கு அனுமதி வழங்கத் தொடர்ந்தும் கலந்துரையாடவும் குழு இணக்கம்

கொள்வனவாளர்கள், உப ஒப்பந்த முகாமைத்துவத் திட்டத்துக்கு அமைய முற்பணங்களை செலுத்தியுள்ள பின்னணியில் கூட்டு ஆதனக் குடியிருப்பு விடுதிகளுக்கு விதிக்கப்பட்டுள்ள வரி தொடர்பில் குழுவின் அவதானம்







கோழிகளுக்கான உணவுகளை இந்நாட்டுக்கு இறக்குமதி செய்வது தொடர்பில் 1969ஆம் ஆண்டு 1ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகளை கருத்தில் கொள்ளும்போது தற்போதைய விலைக்கு அமைய முட்டை ஒன்றை விற்பனை செய்யக்கூடிய சரியான விலையை ஒரு வாரத்துக்குள் வழங்குமாறு அரசாங்க நிதி பற்றிய குழுவின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வாவினால் நிதி மற்றும் வர்த்தக அமைச்சின் அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கப்பட்டது.

அரசாங்க நிதி பற்றிய குழு அதன் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தலைமையில் அண்மையில் (24) நாடாளுமன்றத்தில் கூடியபோதே இது தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

அதேபோன்று, குறித்த ஒழுங்குவிதி தொடர்பில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டதை அடுத்து 2022.05.10 திகதியிலான 2300/12, 2022.05.06 திகதியிலான 2278/21, 2022.06.24 திகதியிலான 2285/19, 2022.10.21 திகதியிலான 2302/31 ஆகிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்களில் வெளியிடப்பட்ட 1969ஆம் ஆண்டு 1ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட ஒழுங்கு விதிகளுக்கு அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவின் அனுமதி வழங்கப்பட்டது.

2010 ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க சீட்டாட்டத் தொழில் (ஒழுங்குபடுத்தல்) சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள் தொடர்பில் அரசாங்க நிதி பற்றிய குழுவில் கலந்துரையாடப்பட்டதுடன், நாட்டின் அபிவிருத்திக்கு வினைத்திறனான வகையில் தயாரிக்கப்பட்டதன் பின்னர் இதற்கான அனுமதி வழங்குவது தொடர்பில் கருத்தில் கொள்வது பொருத்தமானது என்பது குழு உறுப்பினர்களின் கருத்தாக இருந்தது.

சீட்டாட்டத் தொழில் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபை இல்லாமை காரணமாக எழுந்துள்ள சிக்கல்கள் தொடர்பிலும் இதன்போது குழுவில் கவனம் செலுத்தப்பட்டது. உலகில் எந்தவொரு நாட்டிலும் சீட்டாட்டத் தொழில் ஒழுங்குபடுத்தும் நிறுவனமொன்று இல்லாமல் சீட்டாட்டத் தொழிலுக்கான அனுமதிப்பத்திரம் வழங்கப்படுவதில்லை என குழுவின் தலைவர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

இதுவரை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்துக்கு செலுத்தப்படும் வரித்தொகைக்கு மேலதிகமாக சீட்டாட்டத் தொழில் தொடர்பில் செயற்படுவதற்கு எந்த ஏற்பாடுகளும் இல்லை எனவும் அதன் ஆரம்ப கட்டமாக இந்த அனுமதிப்பத்திரத்தை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்ததாகவும் அதிகாரிகள் குறிப்பிட்டனர்.

இந்த சீட்டாட்டத் தொழிலுடன் தொடர்புடைய வரி செலுத்தப்படுகின்றதா, அதன் மூலம் எவ்வளவு வரிகள் அரசுக்கு அறவிடப்பட்டுள்ளன அல்லது இல்லை என்பது தொடர்பில் புரிதலொன்று இல்லாமை, பதிவு செய்யப்பட்டுள்ள 4 சீட்டாட்டத் தொழில்களுக்கு மேலதிகமாக நடத்தப்படும் சீட்டாட்டத் தொழில் தொடர்பில் முறையான ஒழுங்குபடுத்தல் இல்லாமை உள்ளிட்ட அதனுடன் சம்பந்தப்பட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் குழுவில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

அதற்கமைய, இது தொடர்பில் ஒப்பீட்டு ஆய்வொன்றை மேற்கொண்டு மீண்டும் கருத்தில் கொள்ள அரசாங்க நிதி பற்றிய குழு தீர்மானித்தது.

2022ஆம் ஆண்டு 14 ஆம் இலக்க பெறுமதி சேர் வரிச் சட்டத்தின் கீழான கட்டளைகளும் இதன்போது கருத்தில் கொள்ளப்பட்டு அதற்கான அனுமதியும் வழங்கப்பட்டது. எனினும், கொள்வனவாளர்கள், உப ஒப்பந்த முகாமைத்துவத் திட்டத்துக்கு அமைய முற்பணங்களை செலுத்தியுள்ள பின்னணியில் கூட்டு ஆதனக் குடியிருப்பு விடுதிகளுக்கு விதிக்கப்பட்டுள்ள வரியால் ஏற்படும் சிக்கல்கள் காரணமாக பொதுமக்களுக்கு அநீதி இழைக்கப்படுவதாக குழு உறுப்பினர்கள் அரச அதிகாரிகளுக்கு வலியுறுத்தினர்.

மேலும், உள்நாட்டு திறைசேரி உண்டியல்கள் கட்டளைச் சட்டத்தின் கீழான தீர்மானம், 2012ஆம் ஆண்டு 12ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதி, 2022 ஒதுக்கீட்டு (திருத்த) சட்டம் என்பவற்றுக்கு அரசாங்க நிதி பற்றிய குழுவில் அனுமதி வழங்கப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் இராஜாங்க அமைச்சர் சுரேன் ராகவன், அனுப பஸ்குவல், நாடாளுமன்ற உறுப்பினர்க ளான எம்.ஏ.சுமந்திரன், சந்திம வீரக்கொடி, மயந்த திசாநாயக்க, நாலக கொடஹேவா ஆகியோர் கலந்துகொண்டனர்.

# பாகிஸ்தான் உயர்ஸ்தானிகருக்கு வடக்கு மக்கள் மீது திடீர் கரிசனை ஏன்?

## சிவசக்தி ஆனந்தன் கேள்வி



பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் மேஜர் ஜெனரல் (ஓய்வு பெற்ற) உமர் பாரூக் புர்கிக்கு வடக்கு தமிழ் மக்கள் மீது திடீரென கரிசனை ஏற்படுவதற்குக் காரணம் என்ன என்று ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் செயலாளர் சிவசக்தி ஆனந்தன் கேள்வி எழுப்பியுள்ளார்.

அண்மையில் வடக்கிற்கான பயணமொன்றை பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் மேஜர் ஜெனரல் (ஓய்வு பெற்ற) உமர் பாரூக் புர்கி மேற்கொண்டிருந்த நிலையிலேயே அவர் மேற்கண்டவாறு கேள்வி எழுப்பியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர், வடக்கிற்கு விஜயம் மேற்கொண்டு புலமைப்பரிசில் திட்டங்களுக்கான அழைப்பை விடுத்ததோடு, தமிழ்மக்கள் மீதும் தமக்கு கரிசனைகள் இருப்பது போன்றதொரு தோற்றப்பாட்டை வெளிப்படுத்தியுள்ளார்.

உண்மையில் வடக்கிற்கான இவரது மூன்று நாட்கள் திடீர்ப் பயணம் பல்வேறு திரைமறைவு நிகழ்ச்சி நிரல்களைக் கொண்டிருக்கலாம் என்ற சந்தேகங்கள் எமக்குள்ளன.

குறிப்பாக, வடக்கை மையப்படுத்தி இராஜதந்திர முரண்பாடுகளை ஏற்படுத்தும் நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு முனைகின்றாரா என்ற சந்தேகங்களும் உள்ளன.

அதேவேளை, வடக்கு தமிழ் மக்கள் மீது கரிசனை கொண்டவராக தன்னைக் காண்பிக்க முயற்சித்துள்ளார். அவ்வாறு தமிழ் மக்கள் மீது கரிசனை கொள்பவராக இருப்பாராயின் நீதிக்காகப் போராடும் அந்த மக்களுக்காக ஐ.நாவில் இலங்கை அரசாங்கத்திற்கு ஆதரவளித்து வாக்களிப்பதை தவிர்த்திருக்க வேண்டும்.

அதற்கும் முன்னதாக தமிழ் மக்கள் தற்போது நீதிக்காக போராடுவதற்கு காரணமாக இருக்கும் இலங்கை இராணுவத்திற்கு போரியல் ஆயுதங்களை அள்ளி வழங்கி கண்மூடித்தனமான, அப்பட்டமான மனித உரிமைகளை மீறிய போருக்கு காரணமாக இருந்திருக்கக் கூடாது.

இவ்வாறு தமிழ் மக்களுக்கு எதிரான அனைத்துச் செயற்பாடுகளையும் முன்னெடுத்ததன் பின்னர் வடக்கு மக்கள் மீது கரிசனை கொள்வதென்பது வேடிக்கையான விடயமாக உள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

## நக்கல் நமசிவாயம்

தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு என்னெண்டு ரணிலுக்கு யோசனை முன்வைக்கிறதுக்கென நடந்த கூட்டத் தில பல தமிழ்த் தலைவர்களைக் காணேல்லையாம்.. முதலில இவங்களுக்குள்ள ஒற்றுமை வரத் தனியா தீர்வுத் திட்டமொண்டை முன்வைக்கோணும் போல..!



# கிழக்குக் கலைஞர்கள் உருவாக்கிய விழிப்புணர்வு குறுந்திரைப்படம் சாய்ந்தமருதில் வெளியீடு

(மாளிகைக்காடு நிருபர்)

சமூகத்தின் பிரச்சினைகளையும், தவறான பழக்கவழக்கங்களையும் மக்களுக்கு எடுத்துரைத்து சமூக மாற்றத்தை நோக்கி கிழக்கு மாகாண, குறிப்பாக அம்பாறை மாவட்ட தமிழ் பேசும் கலைஞர்கள் ஒன்றிணைந்து முன்னெடுத்த சமூக விழிப்புணர்வு குறுந்திரைப் படம் கடந்த வெள்ளிக் கிழமை (25) மாலை சாய்ந்தமருது அல்-ஜலால் வித்தியாலய மண்டபத்தில் திரையிடப்பட்டது.





இயக்குனர் எல்.எம்.சாஜித் இயக்கத்தில் 'டொப் குயின்' விளம்பர நிறுவன தயாரிப்பில் பிரபல கலைஞர் அஸ்வான் சக்காப் மௌலானாவின் நடிப்பில் வெளிவந்த நாடகங்களான முதல் தொழுகை, பணத்திமிர், பெண் தேவதை, குடிபோதை, வட்டியின் வினை என்பன சிறிய பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு திரையிடப்பட்டது.

மருதம் கலைக்கூடல் மன்றம் மற்றும் 'தெருப் பசங்க' தயாரிப்பு நிறுவனம் ஆகியவற்றின் இணை தயாரிப்பில் உருவாக்கப்பட்ட இந்த சமூக விழிப்புணர்வு குறுந்திரைப்பட வெளியீட்டு நிகழ்வில் சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம்.ஆஷிக், அம்பாறை மாவட்ட கலாசார உத்தியோகத்தர் டீ.எம்.ரின்ஸான், கிழக்கு மாகாண தகவல் தொழில்நுட்பப் பேரவைப் பணிப்பாளர் யூ.எல்.என்.ஹுதா உமர், அமானா நற்பணிமன்ற தலைவர் ஏ.எல்.ஏ.பரீட் ஆகியோர் கலந்துகொண்டு வாழ்த்துரை நிகழ்த்தினர்.

அத்துடன் சாய்ந்தமருது பிரதேச கலாசார உத்தியோகத்தர்களான ஏ.எச்.சபிக்கா, எஸ்.சுரேஷ்குமார், சம்மாந்துறை சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் சிரேஷ்ட சட்டத்தரணி அன்வர் சதாத், கல்முனை மாநகர சபை உறுப்பினர் சுஹைல் அஸீஸ், மருதம் கலைக்கூடல் மன்ற சிரேஷ்ட நிர்வாகிகள் உட்பட கலைஞர்கள், பிரதேச முக்கிய பிரமுகர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# வவுனியா மாவட்டத்தில் 68 மாணவர்கள் 9 ‘ஏ’ சித்தி

## மாகாண மட்டத்தில் இரண்டாமிடம்

(வவுனியா - திவ்யா)

க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் வவுனியா மாவட்டத்தில் 68 மாணவர்கள் 9 ‘ஏ’ சித்திகளைப் பெற்றுள்ளனர்

வவுனியா வடக்கு வலயத்தில் 12 மாணவர்களும் வவுனியா தெற்கு வலயத்தில் 56 மாணவர்களும் 9 ‘ஏ’ சித்திகளைப் பெற்ற நிலையில், மாகாண மட்டத்தில் வவுனியா மாவட்டம் இரண்டாம் நிலையைப் பெற்றுள்ளது

வட மாகாணம் முழுவதாக 551 மாணவர்கள் 9 ‘ஏ’ சித்திகளைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.




அண்மையில் வெளியான 2021 - 2022 கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையின் அடிப்படையில் ஆண்டிமுனை தமிழ் மகா வித்தியாலய தேசிய பாடசாலையில் கல்வி கற்ற 44 மாணவர்களில் 37 மாணவர்கள் உயர்தரம் கற்கத் தகுதி பெற்றுள்ளனர். இவர்களில் சிவகுமார் விந்தியா 9 ‘ஏ’ சித்திகளைப் பெற்றுள்ளார். அத்துடன் வியக்கர்ணன் பிரவீன் 9 பாடங்களிலும் ‘ஏ’ சித்திகளைப் பெற்று பாடசாலைக்கு பெருமை தேடிக் கொடுத்துள்ளனர். இவர்களை அதிபர், பாடசாலை சமூகம், பாடசாலை அபிவிருத்திச் சங்கம் மற்றும் பெற்றோர்கள் உட்பட பலர் பாராட்டியுள்ளனர். (உடப்பு செய்தியாளர்)

# 13 ஐ நடைமுறைப்படுத்துவதில் அரசாங்கம் ஆர்வமாக உள்ளது



## கடன் மறுசீரமைப்பு பேச்சுகள் இறுதிக்கட்டத்தில் என்கிறார் அலி சப்ரி

இந்திய - இலங்கை, ஒப்பந்தத்தின் பிரகாரம் அரசியலமைப்பில் உள்ளீர்க்கப்பட்டுள்ள 13ஆவது திருத்தத்தை அமுல்படுத்துவதற்கு அரசாங்கம் ஆர்வமாக இருப்பதாக வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி அறிவித்துள்ளார்.

இந்தியாவின் ‘வியோன்’ ஊடகத்துக்கு வழங்கிய செவ்வியின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். இந்திய-இலங்கை ஒப்பந்தத்திற்கு அமைவாக 13ஆவது திருத்தச்சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் ஏதும் எடுக்கப்பட்டுள்ளதா என்ற கேள்விக்கு பதிலளித்த அவர், 13ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதில் நாம் உறுதியாக இருக்கின்றோம்.

தற்போது மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்த முடியாதுள்ளது. 2018ஆம் ஆண்டு அப்போதைய அரசாங்கத்தால் கொண்டுவரப்பட்ட சட்ட மூலத்தால் மாகாண சபைத் தேர்தலை நடத்த முடியாதுள்ளது. அந்தச் சட்டத்தின் பிரகாரம் மாகாணங்களுக்கு புதிய எல்லை நிர்ணயம் செய்யப்பட வேண்டும். அதற்கு சில சட்டத் தடைகள் இருப்பதால் அது நடைபெறவில்லை. 2018இல் குறித்த சட்டத்தைத் திருத்துவதற்கான வாக்கெடுப்பிற்கு அதிகாரங்களைப் பகிருமாறு கோரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஆதரவாக வாக்களித்துள்ளது.

எவ்வாறாயினும் 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதில் அரசாங்கம் ஆர்வமாக உள்ளது. அதன் பிரகாரம், அவர்களிடமுள்ள அதிகாரங்கள் அவர்களுக்கு திரும்ப வழங்கப்பட வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கின்றோம். 3ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துமாறு இந்தியா தொடர்ச்சியாகக் கூறிவருகின்றது.

| அருவச் சொத்துக்களின் கொள்வனவு | (217,312) | (84,924) | (229,342) | (92,224) |
| நிதிச்சொத்துக்கள் மூலமாக கிடைத்த பங்கு இலாபம் | 158,238 | 174,845 | 158,238 | 174,845 |
| துணைக்கம்பனிகள் மூலமாக கிடைத்த பங்கு இலாபம் | - | 5,123 | - | - |
| **முதலீட்டு நடவடிக்கைகளுக்கு பெற்ற/(செலுத்திய) தேறிய காசுப்பாய்ச்சல்** | **65,926,057** | **(10,249,398)** | **63,944,275** | **(12,002,087)** |
| **நிதியியல் நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்சல்** | | | | |
| தொகுதி கடன் பத்திர வழங்கலின் மூலம் பெற்ற காசு | - | 6,000,000 | - | 7,500,000 |
| தொகுதி கடன் பத்திரங்களை மீட்பதற்கு செலுத்திய காசு | - | (6,000,000) | - | (7,078,010) |
| குத்தகைகடன் அடமானங்களின் மீள்கொடுப்பனவுகள் | - | - | 2,134,705 | (447,110) |
| செலுத்திய பங்கு இலாபம் | (4,863,589) | (3,147,028) | (4,863,589) | (3,147,028) |
| குத்தகை பொறுப்புக்களின் முதல் சார்பான மீள்கொடுப்பனவுகள் | (873,250) | (1,270,498) | (490,297) | (670,448) |
| **நிதியியல் நடவடிக்கைகளிலான செலுத்திய தேறிய காசுப்பாய்சல்** | **(5,736,839)** | **(4,417,526)** | **(3,219,181)** | **(3,842,596)** |
| **காலப்பகுதிக்கான தேறிய/(செலுத்திய) காசுப்பாய்ச்சல்** | **23,276,540** | **(8,457,711)** | **23,006,218** | **(8,426,665)** |
| தேறிய அந்நிய செலாவணி வேறுபாடு | 4,206,667 | 327,259 | 4,206,667 | 327,259 |
| **ஆண்டின் ஆரம்பத்திலிருந்த காசு மற்றும் காசுக்குச் சமமானவை** | **25,155,288** | **31,944,412** | **25,299,191** | **32,108,832** |
| **காலப்பகுதியின் இறுதியிலிருந்த காசு மற்றும் காசுக்குச் சமமானவை** | **52,638,495** | **23,813,960** | **52,512,076** | **24,009,426** |

காசு பாய்ச்சல் கூற்றின் ஒப்பீட்டுத் தகவல் தற்போதைய அறிக்கையிடல் காலத்திற்கு அமைய மறுவகைப்படுத்தப்பட்டுள்ளது.

## சம்பத் வங்கி பீஎல்சீ (சாதாரண பங்குகள்) 2022 செப்டெம்பர் 30இல் உள்ளவாறு முதல் நிலை 20 பங்குதாரர்கள்

| இல. | பங்குதாரர்களின் பெயர் | பங்குகளின் எண்ணிக்கை | % உரிமை |
|---|---|---|---|
| 1 | வெலியல் வன் பிஎல்சி | 171,117,084 | 14.95 |
| 2 | அயன்கா ஹோல்டிங்ஸ் தனியார் நிறுவனம் | 114,123,916 | 9.97 |
| 3 | ஊழியர் சேமலாப நிதி | 114,123,780 | 9.97 |
| 4 | திரு. வை.எஸ்.எச்.ஐ. சில்வா* | 93,799,287 | 8.20 |
| 5 | வரையறுக்கப்பட்ட ரோஸ்வூட் (தனியார்) நிறுவனம் - (கணக்கு இல 1) | 51,595,893 | 4.51 |
| 6 | செந்தில்வர்ல் ஹோல்டிங்ஸ் (தனியார்) நிறுவனம் | 49,620,577 | 4.34 |
| 7 | பேண்டம் இன்வெஸ்ட்மென்ட்ஸ் (தனியார்) நிறுவனம் | 32,481,106 | 2.84 |
| 8 | வரையறுக்கப்பட்ட அக்பார் ப்ரதர்ஸ் (தனியார்) நிறுவனம் (கணக்கு இல 1) | 27,352,530 | 2.39 |
| 9 | வரையறுக்கப்பட்ட போனிக்ஸ் வென்சர்ஸ் (தனியார்) நிறுவனம் | 24,909,975 | 2.18 |
| 10 | ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் சபை | 22,425,477 | 1.96 |
| 11 | டாக்டர் டி செந்தில்வர்ல் | 11,982,634 | 1.04 |
| 12 | சம்பத் வங்கி பிஎல்சி (கணக்கு இல 4) (சம்பத் வங்கி ஓய்வூதிய நிதியம்) | 11,546,646 | 1.01 |
| 13 | சிட்டி வங்கி நிவ்யோக் எஸ்/ஏ நோர்ஜஸ் வங்கி கணக்கு இல 2 | 11,464,912 | 1.00 |
| 14 | திருமதி. பீ டி ஏ எஸ் பேருவலகே | 10,837,215 | 0.95 |
| 15 | பெம்பர்டோன் ஏசியன் ஒப்பச்சூனிடீஸ் நிதி | 10,250,000 | 0.90 |
| 16 | பிபிஎச் டன்ரா சஸ்டெய்னபல் ப்ரண்டியர் பண்ட் | 9,600,000 | 0.84 |
| 17 | மேக்னா வெல்த் (தனியார்) நிறுவனம் | 6,764,967 | 0.59 |
| 18 | எஸ்.எஸ்.பீ.டீ - ஏ.எல் மெவார் கொமர்ஷல் இன்வெஸ்ட்மெட்ஸ் எல்.எல்.சீ | 6,710,925 | 0.59 |
| 19 | தேசிய அபிவிருத்தி வங்கி பீஎல்சீ/சங்கர் வரதானந்த சோசுந்தரம் | 5,900,000 | 0.51 |
| 20 | மெலன் வங்கி என் ஏ - யுபீஎஸ் குருப் டிரஸ்ட் | 4,655,274 | 0.41 |
| | | 791,262,198 | 69.15 |
| | பணிப்பாளர்கள் வைத்துள்ள பங்குகள் | 2,000,117 | 0.17 |
| | ஏனைய பங்குதாரர்களிடமுள்ள மீதி பங்குகள் | 351,111,640 | 30.68 |
| | மொத்தம் | **1,144,373,955** | **100.00** |

* வரையறுக்கப்பட்ட இந்திரா டிரேடர்ஸ் (தனியார்) நிறுவனத்தின் முகாமைப் பணிப்பாளரான திரு. ருஷங்க சில்வா வங்கியின் நிர்வாகி அல்லாத சுயாதீனமற்ற பணிப்பாளராக செப்டெம்பர் 1ம் திகதி 2017 முதல் அமுலுக்கு வரும் வகையில் நியமிக்கப்பட்டுள்ளார். அதன்படி இந்திரா டிரேடர்ஸ் நிறுவனத்தின் பிரதான பங்குதாரரான திரு. வை.எஸ்.எச்.ஐ. சில்வா வங்கியில் வைத்துள்ள பங்கு உரிமையானது பொது மக்களிடம் உள்ள பங்குகளின் விகிதத்தை கணக்கிடும் பொழுது விலக்கப்பட்டுள்ளது.

| திகதியன்று | 30 செப்டெம்பர் 2022 |
|---|---|
| பொது பங்குதாரர்களின் எண்ணிக்கை | 31,205 |
| % பொது மக்களிடம் உள்ள பங்குகள் | 90.62% |
| தளம்பல் சீராக்கப்பட்ட சந்தை மூலதனம் | ரூ. 43 பில்லியன் |

பங்கு பட்டியலிடல் விதிகள் பிரிவு 7.13.1 (அ) இன் தெரிவு 1 இற்கு இசைவாக குறைந்தபட்ச பொது பங்குரிமை விகித தேவைக்கு வங்கி இணங்குகிறது

## சம்பத் வங்கி பிஎல்சியில் பணிப்பாளர்கள் வைத்துள்ள பங்குகள்

| இல. | இயக்குநர்களின் பெயர் | வைத்திருக்கும் பங்குகளின் தொகை 30.09.2022 திகதியன்று | வைத்திருக்கும் பங்குகளின் தொகை 31.12.2021 திகதியன்று |
|---|---|---|---|
| 1 | திரு. ஹர்ஷ அமரசேக்கர | - | - |
| 2 | திரு. ருஷங்க சில்வா | - | - |
| 3 | திரு. டி. கே. டீ. சில்வா விஜயரட்ண | - | - |
| 4 | திருமதி. ஏ. நாணயக்கார | - | - |
| 5 | கலாநிதி ஜே. டீ. வீ. எஸ். வீரவரண | - | - |
| 6 | திரு. வஜிர குலதிலக்க | - | - |
| 7 | செல்வி ஆர் கே ஜயவர்தன | - | - |
| 8 | திரு. வினோத் ஹைத்ராமணி | 281,129 | 281,129 |
| 9 | திரு. ஹிரான் கப்ரால் (2022 ஜூன் 30ம் திகதி முதல் அமுலாகுமாறு நியமிக்கப்பட்டார்) | - | ஏற்புடையதன்று |
| 10 | திரு. எம். என். ஆர். பெர்னாண்டோ (முகாமைப் பணிப்பாளர்) | 1,718,988 | 1,718,988 |
| 11 | திரு. டி ஏ டி வாஸ் குணசேகர (பிரதம நிதியியல் அதிகாரி) | - | - |

## தேர்ந்தெடுக்கப்பட்ட செயலாற்றுகை குறிகாட்டிகள் (நியதிச்சட்ட அறிக்கையிடலுக்கு அமைவாக)

| விபரம் | வங்கி 30.09.2022 திகதியன்று | வங்கி 31.12.2021 திகதியன்று | குழுமம் 30.09.2022 திகதியன்று | குழுமம் 31.12.2021 திகதியன்று |
|---|---|---|---|---|
| **ஒழுங்குபடுத்துதல் மூலதன போதுமை (ரூ. 000)** | | | | |
| பொது மூலதனம் அடுக்கு I | 96,418,399 | 104,104,589 | 103,366,974 | 111,221,788 |
| அடுக்கு I மூலதனம் | 96,418,399 | 104,104,589 | 103,366,974 | 111,221,788 |
| மொத்த மூலதனம் | 116,985,497 | 126,986,732 | 124,395,509 | 134,586,456 |
| **ஒழுங்குப்படுத்தல் மூலதனப்போதுமை விகிதம் (%)** | | | | |
| பொது மூலதனம் அடுக்கு I விகிதம் (குறைந்தபட்ச தேவைப்பாடு - 7.0%) | 11.31 | 13.95 | 11.53 | 14.05 |
| அடுக்கு I மூலதனம் விகிதம் (குறைந்தபட்ச தேவைப்பாடு - 8.5%) | 11.31 | 13.95 | 11.53 | 14.05 |
| மொத்த மூலதன விகிதம் (குறைந்தபட்ச தேவைப்பாடு - 12.5%) | 13.72 | 17.02 | 13.88 | 17.00 |
| பரிவர்த்தனை விகிதம் % (குறைந்தபட்ச தேவைப்பாடு - 3%) | 6.86 | 7.80 | 7.14 | 8.08 |

| | வங்கி 30.09.2022 திகதியன்று | வங்கி 31.12.2021 திகதியன்று |
|---|---|---|
| **சொத்துக்களின் தரம் (கடன் பட்டியலின் தரம்)** | | |
| நிலை 3இல் வகைப்படுத்தப்பட்டுள்ள கடன்களுக்கான விகிதம் % | 4.08 | 3.20 |
| நிலை 3இற்கான பெறுமானக் குறைப்புடன் தொடர்புடைய கடன்களின் விகிதம் (%) | 50.54 | 45.45 |
| **இலாபத் தன்மை** | | |
| வட்டி மிகை % | 5.35 | 3.61 |
| சொத்துக்களில் இருந்தான வருவாய் (வரிக்கு முன்) % | 0.96 | 1.44 |
| பங்கு மூலதனத்தில் இருந்தான வருவாய் (வரிக்கு பின்) % | 8.08 | 11.05 |
| **ஒழுங்குமுறைப்படுத்தல் திரவத்தன்மை** | | |
| நியதிச்சட்ட திரவச் சொத்துக்கள் (ரூ. 000) | 256,453,338 | 347,721,178 |
| நியதிச்சட்ட திரவச் சொத்துக்களின் விகிதம் (குறைந்தபட்ச தேவைப்பாடு- 20%) | | |
| உள்நாட்டு வங்கித் தொழில் பிரிவு (%) | 22.07 | 32.47 |
| வெளிநாட்டு வங்கித் தொழில் பிரிவு (%) | 28.22 | 30.83 |
| உயர்தர திரவச் சொத்துக்களின் மொத்த இருப்பு (ரூ. 000) | 192,592,818 | 271,499,215 |
| திரவத்தன்மை போதுமை விகிதம் (%) - இலங்கை ரூபா (குறைந்தபட்ச தேவைப்பாடு: 2022 - 90%, 2021 - 100%) | 218.72 | 254.89 |
| திரவத்தன்மை போதுமை விகிதம் (%) - அனைத்து நாணய அலகிலும் (குறைந்தபட்ச தேவைப்பாடு: 2022 - 90%, 2021 - 100%) | 153.92 | 213.43 |
| நிகர நிலையான நிதி விகிதம் (%) (குறைந்தபட்ச தேவைப்பாடு: 2022 - 90%, 2021 - 100%) | 150.22 | 149.92 |

## தொகுதிக்கடன் தகவல்கள்

**(அ) சந்தைப் பெறுமதி**

| தொகுதிக்கடன்கள் - 2017/2022 | கூடியது (ரூ) 2022 | கூடியது (ரூ) 2021 | குறைந்தது (ரூ) 2022 | குறைந்தது (ரூ) 2021 | காலாண்டின் இறுதியில் (ரூ) 2022 | காலாண்டின் இறுதியில் (ரூ) 2021 |
|---|---|---|---|---|---|---|
| நிலையானது - 12.50% | வி/வி | வி/வி | வி/வி | வி/வி | வி/வி | வி/வி |

| தொகுதிக்கடன்கள் - 2018/2023 | கூடியது (ரூ) 2022 | கூடியது (ரூ) 2021 | குறைந்தது (ரூ) 2022 | குறைந்தது (ரூ) 2021 | காலாண்டின் இறுதியில் (ரூ) 2022 | காலாண்டின் இறுதியில் (ரூ) 2021 |
|---|---|---|---|---|---|---|
| நிலையானது - 12.50% | வி/வி | வி/வி | வி/வி | வி/வி | வி/வி | வி/வி |

| தொகுதிக்கடன்கள் - 2019/2024 | கூடியது (ரூ) 2022 | கூடியது (ரூ) 2021 | குறைந்தது (ரூ) 2022 | குறைந்தது (ரூ) 2021 | காலாண்டின் இறுதியில் (ரூ) 2022 | காலாண்டின் இறுதியில் (ரூ) 2021 |
|---|---|---|---|---|---|---|
| நிலையானது - 13.90% | வி/வி | வி/வி | வி/வி | வி/வி | வி/வி | வி/வி |

| தொகுதிக்கடன்கள் - 2021/2028 | கூடியது (ரூ) 2022 | கூடியது (ரூ) 2021 | குறைந்தது (ரூ) 2022 | குறைந்தது (ரூ) 2021 | காலாண்டின் இறுதியில் (ரூ) 2022 | காலாண்டின் இறுதியில் (ரூ) 2021 |
|---|---|---|---|---|---|---|
| நிலையானது - 9.00% | வி/வி | வி/வி | வி/வி | வி/வி | வி/வி | வி/வி |

வி/வி - விற்கப்படவில்லை

**(ஆ) வட்டி விதம்**

| தொகுதிக்கடன்கள் - 2017/2022 | 2022 கூப்பன் சதவீதம் | 2022 விளைத்திறனான சதவீதம் | 2021 கூப்பன் சதவீதம் | 2021 விளைத்திறனான சதவீதம் |
|---|---|---|---|---|
| நிலையானது - 12.50% | 12.50% | 12.89% | 12.50% | 12.89% |

| தொகுதிக்கடன்கள் - 2018/2023 | 2022 கூப்பன் சதவீதம் | 2022 விளைத்திறனான சதவீதம் | 2021 கூப்பன் சதவீதம் | 2021 விளைத்திறனான சதவீதம் |
|---|---|---|---|---|
| நிலையானது - 12.50% | 12.50% | 12.89% | 12.50% | 12.89% |

| தொகுதிக்கடன்கள் - 2019/2024 | 2022 கூப்பன் சதவீதம் | 2022 விளைத்திறனான சதவீதம் | 2021 கூப்பன் சதவீதம் | 2021 விளைத்திறனான சதவீதம் |
|---|---|---|---|---|
| நிலையானது - 13.90% | 13.90% | 13.90% | 13.90% | 13.90% |

| தொகுதிக்கடன்கள் - 2021/2028 | 2022 கூப்பன் சதவீதம் | 2022 விளைத்திறனான சதவீதம் | 2021 கூப்பன் சதவீதம் | 2021 விளைத்திறனான சதவீதம் |
|---|---|---|---|---|
| நிலையானது- 9.00% | 9.00% | 9.00% | 9.00% | 9.00% |

**(இ) ஒப்பீடு செய்யத்தக்க அரச பிணைகளின் வட்டிச் சதவீதம்**

| | 2022 | 2021 |
|---|---|---|
| 3 மாத திறைசேரி உண்டியல் | 31.94% | 6.70% |
| 6 மாத திறைசேரி உண்டியல் | 30.59% | 6.99% |
| 5 ஆண்டு திறைசேரி பிணை | 25.22% | 9.33% |
| 7 ஆண்டு திறைசேரி பிணை | 25.82% | 9.86% |

**(ஈ) நடைமுறை உழைப்பு மற்றும் முதிர்வின் போது உழைப்பு**

| தொகுதிக்கடன்கள் - 2017/2022 | நிலையானது 12.50% 2022 | நிலையானது 12.50% 2021 |
|---|---|---|
| நடைமுறை உழைப்பு | வி/வி | வி/வி |
| முதிர்வின் போதான உழைப்பு-இறுதி விற்பனையின் போது | வி/வி | வி/வி |

| தொகுதிக்கடன்கள் - 2018/2023 | நிலையானது 12.50% 2022 | நிலையானது 12.50% 2021 |
|---|---|---|
| நடைமுறை உழைப்பு | வி/வி | வி/வி |
| முதிர்வின் போதான உழைப்பு-இறுதி விற்பனையின் போது | வி/வி | வி/வி |

| தொகுதிக்கடன்கள் - 2019/2024 | நிலையானது 13.90% 2022 | நிலையானது 13.90% 2021 |
|---|---|---|
| நடைமுறை உழைப்பு | வி/வி | வி/வி |
| முதிர்வின் போதான உழைப்பு-இறுதி விற்பனையின் போது | வி/வி | வி/வி |

| தொகுதிக்கடன்கள் - 2021/2028 | நிலையானது 9.00% 2022 | நிலையானது 9.00% 2021 |
|---|---|---|
| நடைமுறை உழைப்பு | வி/வி | வி/வி |
| முதிர்வின் போதான உழைப்பு-இறுதி விற்பனையின் போது | வி/வி | வி/வி |

வி/வி - விற்கப்படவில்லை

**(உ) விகிதம் - வங்கி**

| | 30.09.2022 | 31.12.2021 |
|---|---|---|
| கடன் உரிமை விகிதம் (%) | 24.9% | 24.9% |
| வட்டிக் காப்பு (தடவை) | 5.9 | 6.6 |
| திரவச் சொத்து விகிதம் (%) (இலங்கை மத்திய வங்கிக்கு சமர்ப்பித்த அறிக்கைக்கு அமைவாக) | 71.4% | 81.7% |



சம்பத் வங்கி

எதிர்காலத்தின் முன்னோடிகள்

பிட்ச் தரப்படுத்தல் : AA-(lka)
கண்ணோட்டம் : RWN

www.sampath.lk

JF8Z

# ஒற்றையாட்சிக்குள் முடக்கும் தீர்வை வலியுறுத்தும் தரப்புகளை தமிழ் மக்கள் நிராகரிக்க வேண்டும்

## கஜேந்திரகுமார் எம்.பி.

(யாழ். நிருபர்)

தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் கூட்டத்திற்கு எனக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை. சமஷ்டி எனக் கூறி ஒற்றையாட்சிக்குள் முடக்கும் தீர்வை வலியுறுத்தும் தரப்புகளை தமிழ் மக்கள் நிராகரிக்க வேண்டும் என அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

சமகால நிலை தொடர்பாக யாழ்ப்பாணத்தில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சிங்கள மக்களின் ஏகோபித்த ஆதரவைப் பெற்ற தரப்புகள் எவ்வாறு சிங்கள மக்களாலேயே விரட்டியடிக்கப்பட்டார்களோ அதேபோன்று தமிழ் மக்களின் ஆணையை பெற்றுவிட்டு அதற்கு மாறாக செயல்படும் தரப்புகளை மக்கள் விரட்டியடிக்க முன்வர வேண்டும்.

எந்தவொரு விதத்திலும் தமிழ் மக்களது அரசியல் அபிலாஷைகளையோ தமிழ்த் தேசிய



அங்கீகாரத்தையோ அல்லது தனித்துவமான இறைமையையோ வடக்கு, கிழக்கில் சுயநிர்ணயத்தை அனுபவிக்கக்கூடிய சமஷ்டி தீர்வையோ வழங்குவதற்கு தயார் இல்லாத இடத்திலே அதனை ஏற்க முடியாது. அடுத்த தேர்தலில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கோ அல்லது விக்னேஸ்வரன் தரப்புக்கோ ஆசனங்கள் குறைவாக கிடைக்கும் என்று தெரிந்தபடியால் அதற்கிடையில் ஒற்றையாட்சியை தமிழ் மக்கள் விரும்பியிருக்கின்றார்கள் என்ற மாபெரும் துரோகத்தை அடுத்த தேர்தலுக்கு முன்பே செய்ய வேண்டும் என்ற சதித்திட்டத்தையும், நிறைவேற்றுவதற்குதான் அவர்கள் அவசரமாக இதை செய்துகொண்டு இருக்கின்றார்கள்.

சில நாட்களுக்கு முன்னர் தொலைபேசி வாயிலாக தொடர்புகொண்ட மாவை சேனாதிராஜா என்னுடன் யாழ்ப்பாணத்தில் சந்தித்துப் பேச விருப்பம் தெரிவித்தாரே தவிர, வேறு எந்த சந்திப்புக்கும் அழைப்பு விடுக்கவில்லை.

தேர்தலுக்குச் சென்றால் மீண்டும் ஆட்சியமைக்க முடியாத நிலை ஏற்படும் என்பதால் தேர்தலுக்குப் போகாமல் தங்களுக்கு அங்கீகாரம் இருப்பதாக காட்டுவதற்கு முயற்சிக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அதற்காக மக்கள் ஆணையுள்ள தரப்புகளுடன் கலந்துரையாடி அவர்களது ஆதரவு தனக்குள்ளே போன்ற மாயத் தோற்றத்தை உருவாக்க முயல்கிறார் – என்றார்.

# விடுதலைப் புலிகள் தலைவரின் பிறந்தநாள் கொண்டாட்டம் வல்வெட்டித்துறையில்



(யாழ். நிருபர்)

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின் 68ஆவது பிறந்தநாள் நிகழ்வுகள் நேற்று முன்தினம் (26) யாழில் பல இடங்களில் கொண்டாடப்பட்டது.

வல்வெட்டித்துறையில், விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் பூர்வீக வீட்டின் முன்பாக வடமாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கத்தால் கொண்டாடப்பட்டது.

இதன்போது பொதுமக்களுக்கு எள்ளுருண்டைகள் மற்றும் இனிப்புகள் வழங்கப்பட்டன.

அதேவேளை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும் மாணவர்களால் விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுக்கு பிறந்தநாள் கேக் வெட்டப்பட்டுள்ளது.

அத்துடன், நல்லூர் ஆலய முன்றலில் யாசகர் ஒருவர் ஆலய வழிபாட்டிற்கு வருகை தந்தவர்களுக்கு விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின் பிறந்தநாளை முன்னிட்டு இனிப்புகளை வழங்கினார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

### மாவீரர் கப்டன் பண்டிதருக்கு அஞ்சலி



(யாழ். நிருபர்)

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மாவீரர் கப்டன் பண்டிதருக்கு அவரது பூர்வீக இல்லத்தில் நேற்று (27) அஞ்சலி செலுத்தப்பட்டது.

வல்வெட்டித்துறை கம்பர்மலையில் உள்ள அவரது வீட்டில் நடைபெற்ற அஞ்சலி நிகழ்வில், மாவீரர் பண்டிதரின் தாயார் சுடரேற்றினார்.

அச்சுவேலி பகுதியில் 1985ஆம் ஆண்டு ஜனவரி 9ஆம் திகதி இராணுவத்தினருடன் ஏற்பட்ட மோதலில், புலிகளின் முக்கிய தளபதிகளில் ஒருவரான கப்டன் ப.இரவீந்திரன் (பண்டிதர்) வீரச்சாவடைந்தார்.

### மாவீரர் லெப். சங்கருக்கு அஞ்சலி



(யாழ். நிருபர்)

தமிழீழ விடுதலைப் புலிகளின் முதல் மாவீரர் லெப். சங்கருக்கு அவரது பூர்வீக இல்லத்தில் நேற்று (27) அஞ்சலி செலுத்தப்பட்டது.

வல்வெட்டித்துறை கம்பர் மலையிலுள்ள அவரது வீட்டில் மாவீரர் பண்டிதரின் தாயார் சுடரேற்றி அஞ்சலி செலுத்தினார்.

இதன்போது வடமாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் உள்ளிட்டோரும் அஞ்சலி செலுத்தினர்.

# யாழ். பல்கலையில் முதன்முதலாக கணினி விஞ்ஞானத்தில் பேராசிரியர்கள் நியமனம்



ஏ.ரமணன் | எம். சியாமளன்

(யாழ். நிருபர்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கணினி விஞ்ஞானத்துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர்கள் இருவர் பேராசிரியர்களாகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளனர். கணினி விஞ்ஞானத்துறையின் முன்னாள் தலைவரும், சிரேஷ்ட விரிவுரையாளருமான கலாநிதி ஏ.ரமணன், சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி எம். சியாமளன் ஆகியோரை பேராசிரியர்களாக பதவி உயர்த்துவதற்கு பல்கலைக்கழகப் பேரவை ஒப்புதல் வழங்கியுள்ளது.

பல்கலைக்கழகப் பேரவையின் மாதாந்தக் கூட்டம் நேற்று முன்தினம் (26) துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா தலைமையில் இடம்பெற்றது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கை நியமங்களுக்கமைய திறமை அடிப்படையில் பேராசிரியர் பதவி உயர்வுக்காக விண்ணப்பித்த சிரேஷ்ட விரிவுரையாளர்கள் கலாநிதி ஏ. ரமணன், கலாநிதி எம். சியாமளன் ஆகியோரின் விண்ணப்பங்களை மதிப்பீடு செய்த மூதவையினால் விதந்துரைக்கப்பட்ட துறைசார் நிபுணர்களின் மதிப்பீட்டு அறிக்கைகள், நேர்முகத் தேர்வு முடிவுகள் ஆகியன பேரவைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டன.

அவற்றின் அடிப்படையில், கணினி விஞ்ஞானத்துறையின் முன்னாள் தலைவரும், சிரேஷ்ட விரிவுரையாளருமான கலாநிதி ஏ.ரமணன், சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி எம். சியாமளன் ஆகியோர் கணினி விஞ்ஞானத்தில் பேராசிரியர்களாக பதவி உயர்த்தப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கணினி விஞ்ஞானத்துறை ஸ்தாபிக்கப்பட்டு 30 வருடங்கள் கடந்துள்ள நிலையில், இவர்கள் இருவரும் முதன் முதலாக கணினி விஞ்ஞானத்துறையில் பேராசிரியர்களாகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# முன்பள்ளி ஆசிரியரால் தாக்கப்பட்ட மூன்று வயது சிறுவன்

(யாழ். நிருபர்)

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முன்பள்ளி நிலையம் ஒன்றில் ஆசிரியரால் தாக்கப்பட்ட மூன்று வயது சிறுவன் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார்.

குறித்த ஆசிரியர் சிறுவர்களுக்கு கோலாட்டம் பழக்கியுள்ளார். இதன்போது சிறுவன் தவறிழைத்ததாக தெரிவித்து அவனை கோலாட்ட தடியால் அடித்துள்ளார். பின்னர் சிறுவனின் அழுகையை அடக்குவதற்கு முயற்சித்துள்ளார். இதனால் முகத்தில் கீறல் காயங்கள் ஏற்பட்டுள்ளன.

பாதிக்கப்பட்ட சிறுவன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ள நிலையில் 36 வயதான ஆசிரியர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கோப்பாய் பொலிஸார் இது தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.



அகில இலங்கை தேசிய மட்ட தமிழ் மொழித்தினப் போட்டியில் ப/கம்பஹா த.ம.வித்தியாலயத்தைச் சேர்ந்த யோகராஜ் வித்தியாசினி அறிவிப்பாளர் போட்டியில் முதலிடம் பெற்று பாடசாலைக்கு மட்டுமல்லாது வெலிமடை கல்வி வலயத்திற்கும் ஊவா மாகாணத்திற்கும் பெருமை சேர்த்துள்ளார். பாடசாலை அதிபர் இம்மாணவியின் சாதனையை பாராட்டும் அதேவேளை பயிற்றுவித்த ஆசிரியர்களுக்கு நன்றியையும் வாழ்த்துகளையும் தெரிவித்தார்.

# மகனின் தாக்குதலில் தந்தை பலி

(பதுளை நிருபர்)

மனநிலை பாதிக்கப்பட்ட வளர்ப்பு மகனின் தாக்குதலால், தந்தையொருவர் ஸ்தலத்திலேயே உயிரிழந்த சம்பவம் ஒன்று பதுளை வேவெஸ்ஸ பெருந்தோட்ட குடியிருப்புப் பகுதியில் நேற்று (27) இடம்பெற்றுள்ளது. அதே பிரதேசத்தைச் சேர்ந்த தர்மராஜ் என்ற 52 வயது நிரம்பியவரே இவ்வாறு உயிரிழந்தவராவார். தாக்குதலை மேற்கொண்ட மனநிலை பாதிக்கப்பட்ட வளர்ப்பு மகன் கைதுசெய்யப்பட்டுள்ளார். உயிரிழந்தவரின் சடலம், வேவேஸ்ஸ தோட்டக் குடியிருப்பு பகுதி நீதவான் விசாரணைக்கென, சம்பவ இடத்திலேயே வைக்கப்பட்டிருந்தது. இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது,

தாக்குதலை மேற்கொண்ட வளர்ப்பு மகன் பிறந்தவுடனேயே அவரது தந்தை தனது மனைவியை பிரிந்து சென்றுள்ளார். இதனையடுத்து, தாய் பலியான நபரை திருமணம் செய்துகொண்டு வாழ்க்கை நடத்தியுள்ளார். உயிரிழந்த நபர் அச்சிறுவனையும், தனது மூத்த மகனைப்போன்று வளர்த்து வந்துள்ளார் என்றும் தனக்கு பிறந்த குழந்தைகளை விட மனநிலை பாதிக்கப்பட்ட மகன் மீது மிகுந்த பாசம் கொண்டிருந்தார் என்றும் தெரியவருகிறது.

சம்பவ தினம் குறித்த வளர்ப்பு மகன் மரக்கட்டை ஒன்றினால் தந்தையைத் தாக்கி கொலை செய்துள்ளமையும் காரணங்கள் எதுவுமின்றி தனது வீட்டாரை வழமையாக தாக்கிவருவதும் விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது. இச்சம்பவம் குறித்து பதுளை பொலிஸாரினால் தொடர்ந்தும் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

# மாணவர்கள் ஒழுக்கத்திலும் கவனம் செலுத்தவேண்டும்

## அஹதிய்யா பாடசாலை அதிபர் ஹலீம்தீன் தெரிவிப்பு

(உக்குவளை நிருபர்)

மாணவர்கள் திறமையாகக் கற்பதுடன் ஒழுக்கப் பண்பாடுகளிலும் சிறந்து விளங்கவேண்டும் என்று உக்குவளை அஜ்மீர் தேசிய பாடசாலை முன்னாள் பிரதி அதிபரும் அஹதிய்யா பாடசாலை அதிபருமான ஹலீம்தீன் ஹாஜி தெரிவித்தார்.

உக்குவளை அல்மினா ஆரம்ப பாடசாலை தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களைப் பாராட்டி பரிசில்கள் வழங்கும் நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அதிபர் நிரோசியா தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் அவர் மேலும் உரையாற்றுகையில்,

தமது பிள்ளைகள் தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெறுவதற்காக பெற்றோர் எடுக்கும் கடும் முயற்சிகளால் இப்புலமைப் பரிசில் பரீட்சை பெற்றோருடையது என்று சிலர் சொல்வதுண்டு.

புலமைப்பரிசில் பெறுபேறுகள் மாத்திரமே இறுதி முடிவென்று அவர்கள் கருதக்கூடாது. தமது பிள்ளைகள் சாதாரணதரம் மற்றும் உயர்தரம் ஆகிய பரீட்சைகளிலும் சித்தி பெறுவதற்காகவும் பெற்றோர் அதிக முயற்சியெடுக்க வேண்டிய தேவையுள்ளது.

ஒரு சில பெற்றோர் ஐந்தாம் தரத்துடன் தம்



முயற்சியைக் கைவிட்டுவிட்டு அதன் பிறகு எப்படியும் தம் பிள்ளைகள் கற்பார்கள் என்று எண்ணுவதுண்டு. அது தவறு. இன்றுள்ள மோசமான சூழல் காரணமாக மாணவர்களும் இளைஞர்களும் வழிதவறிச் செல்லக்கூடிய நிலையிருப்பதை அனைவரும் அறிவோம். எனவே தமது பிள்ளைகளை பாதுகாப்பது பெற்றோர்களின் தலையாய கடமையாக உள்ளது.

மாணவர்கள் கல்வியால் எவ்வித சாதனைகள் செய்தாலும் அவர்களிடம் ஒழுக்கப் பண்பாடுகள் இல்லையென்றால் பெற்ற கல்வியால் பயனில்லை. அனைத்து மதங்களும் ஒழுக்கப் பண்பாடுகளுக்கு முக்கியத்துவமளிப்பது மட்டுமின்றி அதன்படி வாழவும் கூறுகின்றன. அதற்கான சான்றுகளை நிறையவே சொல்லமுடியும். ஒரு மாணவன் கல்வியிலும் ஒழுக்கப்பண்பாடுகளிலும் சிறப்புற்றால் அது அந்த மாணவனின் பெற்றோர் மற்றும் ஊருக்கும் பெருமை சேர்க்கிறது.

நாம் கல்வி கற்ற காலங்களில் இப்போதுள்ள வசதிகள் இருக்கவில்லை. எமது ஓய்வுநேரங்களை வாசிப்பிலும் நல்ல ஒழுக்கப்பண்பாடுகளைக் கற்று அதன்படி வாழ்வதிலும் கழித்தோம். அதுமட்டுமன்றி, எம்மை வளர்த்து ஆளாக்கிய பெற்றோர் மற்றும் கல்வியறிவைப் பெற்றுத்தந்த ஆசான்களை என்றும் மறப்பதில்லை.

எனவே மாணவர்கள் தாம் கற்கும் காலத்தை பொற்காலமாகக் கருதி திறமையாகக் கற்று ஒழுக்கப் பண்பாடுகளிலும் சிறப்புறவேண்டும். அவ்வாறானவர்களது பணிகளும் சிறப்பாகவே அமையும் என்பதும் உறுதி. பெற்றோர்கள் அதற்காக கவனம் செலுத்துவது அவசியம்.

தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் சாதாரணதர மற்றும் உயர்தரப் பரீட்சைகளில் சித்தியடையாத நிலைமையையும் நாம் கண்டுள்ளோம்.

எனவே ஐந்தாம் வகுப்பிலிருந்தே தமது பிள்ளைகளின் கல்வித்துறை மட்டுமின்றி ஒழுக்கப் பண்பாட்டையும் அவர்களுக்கு ஊட்டுவது மிக அத்தியாவசியம் என்பதை உணரவேண்டும் என்றார்.




பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கடந்த 25ஆம் திகதி வெள்ளிக்கிழமை இடம்பெற்ற 'சர்வதேச வாரம்-2022' என்ற நிகழ்வில் இலங்கைக்கான மேலதிக இந்திய உயர்ஸ்தானிகர் வினோத் கே.ஜேக்கப் கலந்துகொண்டார். இந்திய அரசியலமைப்பு தினத்தை நினைவுகூரும் வகையில், பேராதனைப் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் எம்.டி.லமாவன்சாவுடன் இணைந்து, இந்திய அரசியலமைப்பு தொடர்பான புகைப்படக் கண்காட்சியையும் அவர் ஆரம்பித்து வைத்தார். கண்டி உதவி இந்தியத் தூதுவர் டொக்டர் எஸ்.ஆதிரா, பேராதனைப் பல்கலைக்கழக சட்டத்துறைத் தலைவர் பேராசிரியர் தீபிகா உடகம உட்பட பலர் இதில் கலந்துகொண்டனர். இந்திய மேலதிக உயர்ஸ்தானிகர் கண்காட்சியைப் பார்வையிடுவதையும் உரையாற்றுவதையும் படங்களில் காணலாம்.

(கண்டி நிருபர்)

# மாணவர்களுக்கு இலவச தலைக்கவசம்



(நுவரெலியா மேலதிக நிருபர்)

நுவரெலியா பிரதேசத்தைச் சேர்ந்த தமிழ், சிங்கள பாடசாலைகளுக்கு கடந்த வெள்ளிக்கிழமை (25) இலவச தலைக்கவசங்கள் வழங்கப்பட்டன.

'எமது பிள்ளைகள் பெறுமதியானவர்கள்' என்ற தொனிப்பொருளின் கீழ் தலைக்கவசமின்றி செல்லும் பாடசாலை மாணவர்களின் நலன் கருதியும், வீதி விபத்துகளில் மாணவர்களின் உயிர்காக்கும் நோக்குடனும் குறித்த தலைக்கவசங்கள் வழங்கப்பட்டன. நுவரெலியா பொலிஸ் நிலையத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில் நுவரெலியா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, நுவரெலியா பொலிஸ் போக்குவரத்துப் பிரிவு பொறுப்பதிகாரி ஆகியோர் இணைந்து மாணவர்களுக்கு இலவசமாக குறித்த தலைக்கவசங்களை வழங்கினர்.

அலியான்ஸ் காப்புறுதி நிறுவனம் மற்றும் பொலிஸாரின் ஆதரவுடன் இடம்பெற்ற இந்நிகழ்வில் தலைக்கவசம் குறித்த விழிப்புணர்வுகளும் அதன் பயன்பாடு பற்றிய விளக்கமும் மாணவர்களுக்கு வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

அலியான்ஸ் காப்புறுதி நிறுவனத்தின் நாடளாவிய ரீதியிலான சமூக வேலைத்திட்டமாக குறித்த தலைக்கவச விநியோகம் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# தமிழ், முஸ்லிம் தலைமைகள் கொள்கைவாதக் கோஷங்களை புறந்தள்ளிவிட்டு அதிகபட்ச அதிகாரப்பகிர்வைப் பெறமுடியும்

## ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம்

(செங்கலடி நிருபர்)

இந்த நாட்டிலுள்ள பெரும்பான்மையான மக்கள், இன நல்லிணக்கம் தொடர்பாக சிந்திக்கத் தொடங்கியுள்ள சூழ்நிலையை சாதகமாகப் பயன்படுத்தி இனப்பிரச்சினைக்கான தீர்வைப் பெற்றுவிடமுடியும் என்ற நம்பிக்கை ஜனாதிபதிக்கு ஏற்பட்டுள்ளதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமாக ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

தமிழ், முஸ்லிம் தலைமைகள் கொள்கைவாதக் கோஷங்களைப் புறந்தள்ளி யதார்த்தபூர்வமாக பக்குவமாக கையாண்டால் தெற்கிலுள்ள சிங்களவர்களும் நியாயமானதென்று நம்புகின்றளவுக்கு அதிகபட்ச அதிகாரப்பகிர்வை அடைந்துகொள்வதற்கான நல்லதொரு சந்தர்ப்பம் உருவாகும் என்றும் அவர் கூறினார்.

மட்டக்களப்பு, ஏறாவூர் நகரசபையின் ஏற்பாட்டில் தவிசாளர் விருது வழங்கும் நிகழ்வு கடந்த சனிக்கிழமை (26) ஏறாவூர் அலிகார் தேசிய பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.





ஏறாவூர் நகரசபைத் தவிசாளர் எம்.எஸ்.நழீம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் முன்னாள் இராஜாங்க அமைச்சர் அலி ஸாஹிர் மௌலான, முன்னாள் கிழக்கு மாகாண அமைச்சர் எம்.எஸ்.சுபைர் உட்பட பலர் கலந்துகொண்டனர். ஓய்வுபெற்ற அதிகாரிகள், உத்தியோகத்தர்கள், சாதனையாளர்கள், விளையாட்டு வீரர்கள் அடங்கலாக 800 பேருக்கான விருதுகள் வழங்கப்பட்டன.

அவர் தொடர்ந்து உரையாற்றறுகையில், தெற்கிலுள்ள சிங்களப் பெரும்பான்மை மக்கள் மத்தியில் இனப்பிரச்சினையை மூலதனமாக வைத்து உசுப்பேற்றும் பித்தலாட்ட அரசியல் செய்வதற்கான இடைவெளி குறைந்துவிட்டதன் காரணமாக இனப்பிரச்சினைக்குத் தீர்வு வழங்கும் விடயத்தை ஜனாதிபதி தற்போது முன்னெடுத்துள்ளார். இதனை தமிழ், முஸ்லிம், மலையகக் கட்சிகள் இலாபகரமாக பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

பெரும்பான்மை சமூகத்திற்கு மத்தியிலுள்ள தேசியவாதிகள் மீது இன்னும் சந்தேகம் உள்ளது. நாடாளுமன்றத்தில் மீண்டும் கூச்சலிடலாமா என முயற்சித்துப் பார்க்கிறார்கள். ஆனால், அவர்களின் கருத்துகள் கவனத்திற்கொள்ளப்படுவதில்லை.

இந்த நாட்டிலுள்ள மக்கள் இன ரீதியாக பிரிந்துகொண்டு வாழ்வது அரசியல்வாதிகளின் போலியான பித்தலாட்டமே என பெரும்பான்மை சமூகத்தினர் உணர்ந்துள்ளனர். இந்த நாட்டின் பொருளாதாரத்தை சீர்குலைத்து இலாபகரமாக பயன்படுத்தி நாட்டைச் சூறையாடியவர்கள் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் பொறுப்புதாரிகளென இளைஞர்கள் நம்புகிறார்கள்.

இந்த நாட்டிலுள்ள பெரும்பான்மையான மக்கள் சிந்திக்கத் தொடங்கியுள்ளனர். இந்தச் சூழ்நிலையை சாதகமாகப் பயன்படுத்தி இனப்பிரச்சினைக்காக தீர்வைப் பெற்றுவிட முடியும் என்ற நம்பிக்கை ஜனாதிபதிக்கு ஏற்பட்டுள்ளது.


தமிழ், முஸ்லிம் தலைமைகள் கொள்கைவாதக் கோஷங்களை புறந்தள்ளிவிட்டு யதார்த்தபூர்வமாக பக்குவமாகக் கையாண்டால் தெற்கிலுள்ள சிங்களவர்களும் நியாயமானதென்று நம்புகின்றளவிற்கு அதிகபட்ச அதிகாரப்பகிர்வை அடைந்துகொள்வதற்கான நல்லதொரு சந்தர்ப்பம் உருவாகும்.

விடுதலைப் புலிகளின் போராட்டம் தமிழ் மக்களின் பார்வையில் தமது இலக்குகளை அடைவதற்காக வழியாக நியாயப்படுத்தினாலும் அதனை அடைவதற்காக வன்முறையைக் கையிலெடுத்த விடயம் சிங்கள மக்கள் மத்தியில் மிக மோசமாக விமர்சிக்கப்படுகிறது. சிங்கள மக்கள் மத்தியிலும் வன்முறை மூலம் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு போராட்டம் நடைபெற்றது. இந்த இரண்டு குழுக்களும் போராட்டத்தில் ஈடுபட்டவர்களின் நினைவு தினத்தை அனுஷ்டிக்கின்றன.

தமிழ்ச் சமூகம் முள்ளிவாய்க்கால் சம்பவம் விசாரிக்கப்பட வேண்டும். சரணடைந்தவர்களின் உயிர்களுக்கு என்ன நடந்தது என்ற கேள்வியை சர்வதேசத்திடம் முன்வைத்துள்ளார்கள். முஸ்லிம் சமூகத்தில் அப்பாவிகள் பலரை கைதுசெய்தமை, ஜனாஸாக்களை எரித்தமை தொடர்பாக என்ன நட்டஈட்டை அரசாங்கம் தரப்போகிறது.

தமிழ், முஸ்லிம் மக்களிடையே நிறைய பிரச்சினைகள் உள்ளன. இவற்றை நாம் பேசித் தீர்க்க முடியும். எமது பிரச்சினைகளுக்குள்ளே மற்றவர்கள் தலையிட நாம் ஒருபோதும் இடமளிக்க கூடாது - என்றார்.

# குடியிருப்புப் பிரதேசத்தில் தொலைத்தொடர்பு கோபுரம் அமைக்க எதிர்ப்புத் தெரிவித்து மக்கள் ஆர்ப்பாட்டம்








(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு, காத்தான்குடி 2ஆம் குறிச்சி வாவிக் கரையோரத்தில் டயலொக் கோபுரத்தை அமைப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று முன்தினம் (26) பொதுமக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பொதுமக்கள் குடியிருக்கும் இப்பகுதியில் இந்தக் கோபுரத்தை அமைக்கக்கூடாது என இதன்போது ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பொதுமக்கள் வேண்டுகோள் விடுத்தனர். குறித்த இப்பிரதேசத்தில் அரச பாடசாலைகள், அரச வைத்தியசாலை, பள்ளிவாசல்கள் உட்பட பொது நிறுவனங்கள் பல அமைந்துள்ளன.

இபகுதியிலுள்ள பொதுமக்கள் பெண்கள் சுலோகங்களைத் தாங்கியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

குறித்த இடத்தில் கோபுரம் அமைக்கப் படுவதால் பொதுமக்களும் சிறுவர்களும் பாதிக்கப்படுவதாகவும் குறித்த இடத்தில் பாடசாலை, விளையாட்டு மைதானம் ஒன்றை அமைத்துத் தருமாறும் காத்தான்குடி நகரசபைத் தவிசாளரிடம் வேண்டுகோள் விடுப்பதாகவும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பொதுமக்கள் தெரிவித்தனர்.

ஆர்ப்பாட்டம் இடம்பெற்றுக்கொண்டிருந்த போது அங்கு வருகை தந்து குறித்த பகுதி கிராம உத்தியோகத்தர் மற்றும் அதிகாரிகள் இது தொடர்பாக காத்தான்குடி பிரதேச செயலாளர் உரிய மேலதிகாரிகளுக்கு அறிவித்துள்ளதாகவும் அதனால் ஆர்ப்பாட்டத்தைக் கைவிடுமாறும் கேட்டுக்கொண்டனர்.

இதையடுத்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பொதுமக்கள் கலைந்துசென்றனர். பொது மக்களுடன் அதிகாரிகள் பேச்சுவார்த்தையிலும் ஈடுபட்டதுடன், அரச அதிகாரிகளுக்கான மகஜர்களும் கையளிக்கப்பட்டன.

# கல்முனை ஸாஹிரா தேசியக் கல்லூரியில் உயர்தரம் பயில 300 மாணவர்கள் தகுதி

(நிந்தவூர் நிருபர்)


க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை முடிவுகளின் அடிப்படையில் கல்முனை ஸாஹிரா தேசியக் கல்லூரியில் க.பொ.த. உயர்தரத்தில் உயிரியல், கணிதம், தொழில்நுட்பம், கலை மற்றும் வர்த்தகத் துறைகளில் கல்வி பயில்வதற்கு 300 மாணவர்கள் தகுதிபெற்றுள்ளனர்.

ஐ.அப்துல் ஹாதி, ஐ.எம்.ஸாபின் ஸஹ்மி, ஏ.ஏ.ஸரீஜ் ஸுஹ்மி, ஏ.ஏ.முஹம்மட் அர்ஹம் ஆகியோர் சகல பாடங்களிலும் அதி திறமைச் சித்திபெற்றுள்ளதுடன், 6 பாடங்களுக்கு மேல் 353 மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர்.

இது 85.49 சித்தியடைந்த வீதமாகும் என கல்லூரி அதிபர் எம்.ஐ.ஜாபிர் தெரிவித்தார்.

# கசிப்பு விற்பனை நிலையங்கள் பொலிஸாரால் முற்றுகை

## 11,000 மி.லீ. கசிப்பு 6 சந்தேக நபர்கள் கைது



(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டம், களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்பட பல இடங்களில் கசிப்பு மற்றும் கோடா என்பன சட்டவிரோதமான முறையில் உற்பத்திசெய்யப்பட்டு விற்பனை செய்யப்படுவதாக களுவாஞ்சிக்குடி பொலிஸ் விசேட புலனாய்வுப் பிரிவுக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து, துரிதமாக செயற்பட்ட பொலிஸார் பெருமளவு கசிப்பு மற்றும் கோடா போன்றவற்றையும், அதன் உற்பத்திற்கு உபயோகிக்கப்பட்ட பொருட்களையும், சம்பந்தப்பட்ட ஒரு பெண் உட்பட 6 பேரையும் சந்தேகத்தின்பேரில் கைதுசெய்துள்ளதுடன், 2 மோட்டார்சைக்கிள்களையும் நேற்று முன்தினம் (26) கைப்பற்றியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் காஞ்சிரங்குடா பகுதியிலிருந்து பழுகாமம் பகுதிக்கு வரலிகளில் 2 மோட்டார்சைக்கிள்களில் சட்டவிரோத கசிப்பு எடுத்துவந்த நிலையில், அதனை கையும் மெய்யுமாக பொலிஸார் மிகவும் சூட்சுமமான முறையில் பறிமுதல் செய்து, சந்தேக நபர்களையும், கைதுசெய்துள்ளனர்.

இந்நிலையில், மகிழூர் மற்றும் மகிழூர்முனை ஆகிய பகுதிகளிலும் கசிப்பு உற்பத்தி செய்துவந்த நிலையங்கள் முற்றுகையிடப்பட்டு, அதனை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இந்நடவடிக்கைகளில் 11,000 மில்லி லீற்றர் கசிப்பு கைப்பற்றப்பட்டுள்ளதுடன், ஒரு பெண் அடங்கலாக 6 சந்தேகநபர்களைக் கைதுசெய்துள்ளதுடன், 2 மோட்டார்சைக்கிள்களையும், பெரல்கள், கேஸ் அடுப்பு, கேஸ் சிலிண்டர்கள், பானைகள் போன்றவற்றையும் கைப்பற்றியுள்ளனர். கைப்பற்றப்பட்ட பொருட்களையும், கசிப்பையும், சந்தேகநபர்களை யும், நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக பொலிஸார் இதன்போது தெரிவித்தனர்.

மட்டக்களப்பு மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் ஆலோசனையின்பேரில், களுவாஞ்சிக்குடி பிரதேச உதவிப் பொலிஸ் அத்தியட்சகரின் வழிகாட்டலில், களுவாஞ்சிக்குடி பொலிஸ் நிலையப் பெறுப்பதிகாரி அபேய விக்கிரமவின் தலைமைத்துவத்தின் கீழான பொலிஸ் குழு இந்நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஐஸ் – ஹெரோயினுடன் சம்மாந்துறையில் ஒருவர் கைது!



(சம்மாந்துறை நிருபர்)

போதைப்பொருட்களுடன் (27 வயது) பெண் ஒருவரை சம்மாந்துறை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

சம்மாந்துறை பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவலொன்றின் அடிப்படையில் உப பொலிஸ் பரிசோதகர் ஜனோசன் தலைமையிலான பொலிஸ் குழுவினர் அம்பாறை மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஆர்.எம்.டி.ஜே.ரத்நாயக்கவின் வழிகாட்டலின் அடிப்படையில் போதைப்பொருள் விற்பனை இடம்பெற்ற வீட்டை சுற்றிவளைத்து திருமணமான பெண் ஒருவரை போதைப்பொருட்களுடன் கைதுசெய்துள்ளனர்.

சந்தேகநபரை சம்மாந்துறை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பெண்ணிடமிருந்து 11 கிராம் 50 மில்லிகிராம் எடையுடைய ஐஸ் போதைப் பொருளையும், 435 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளையும் கைப்பற்றியுள்ளனர்.

இந்த சுற்றிவளைப்பில் சம்மாந்துறை பொலிஸ் நிலைய பெருங்குற்றப் பிரிவு பொறுப்பதிகாரி உப பொலிஸ் பரிசோதகர் கே.சதீஷ்கர், பொலிஸ் சார்ஜன் குமாரசிங்க, பொலிஸ் கான்ஸ்டபிள் கௌதம் ஆகியோரும் இடம்பெற்றிருந்தனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

## போடியார் புலம்பல்!



**கூட்டமைப்பும், விக்னேஸ்வரனும் ரணிலிட வலையில் சிக்கப்போறாங்க எண்டு முன்னாள் ரெலோ எம்.பி. ஸ்ரீகாந்தா சொல்லி இருக்காரு எலுவா?**

**ஒண்டா தம்பி குழி வெட்டுற நரியோட கூட்டு வைச்சுத்தான் கடந்த நல்லாட்சியில கூட்டமைப்பு 15 எம்.பிமார இந்தத் தடவ 10 ஆக மாற்றிய பெரும அந்த நரியையே சாரும். இப்ப அவரிட வலையில சிக்கினால் 10 எம்.பி. பட்டியல் 5 ஆக அடுத்த தேர்தலில மாறும் எண்டதில உண்மை இல்லாமல் இல்ல!**

# தம்பலகாமம் பிரதேச செயலகத்தில் சாகித்திய விழா




(கந்தளாய் நிருபர்)

தம்பலகாமம் பிரதேச செயலகம் மற்றும் பிரதேச கலாசார அதிகாரசபை இணைந்து ஏற்பாடுசெய்த சாகித்திய விழா நேற்று முன்தினம் (26) பிரதேச செயலக மண்டபத்தில் இடம்பெற்றது.

பிரதேச செயலாளர் திருமதி ஜெ.ஸ்ரீபதி தலைமையில் இடம்பெற்ற குறித்த சாகித்திய விழாவில் பிரதம அதிதியாக திருகோணமலை மாவட்ட செயலாளர் பி.எச்என்.ஜயவிக்ரம கலந்து சிறப்பித்தார்.

குறித்த விழாவில் கலை, கலாசார போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டதுடன் 'ஏர்முனை' எனும் நூல் பிரதியும் வெளியிட்டு வைக்கப்பட்டது.

இதில் தம்பலகாமம் பிரதேச சபை தவிசாளர் சம்பிக்க பண்டார, பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளர், பதவிநிலை உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். இதன்போது சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.




# தேசிய உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வேலைத்திட்டம் அம்பாறையில் ஆரம்பம்



(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

ஜனாதிபதியின் தேசிய உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வேலைத்திட்டம் அம்பாறை மாவட்டத்தில் நேற்று முன்தினம் (26) ஆரம்பித்துவைக்கப்பட்டது.


இதனடிப்படையில், சாய்ந்தமருது பிரதேச செயலகத்தின் அனுசரணையில் பிரதேச செயலகமும் சாய்ந்தமருது கமநலசேவை நிலையமும் இணைந்து பயிர் விதைகள் நடும் வேலைத்திட்டம் மாவடிப்பள்ளி பிரதேசத்தில் மேட்டுநிலத்தில் நடப்பட்டு ஆரம்பித்துவைக்கப்பட்டது.

இந்நிகழ்ச்சித்திட்டம் சாய்ந்தமருது உதவிப் பிரதேச செயலளர் எம்.ஐ.முஆபிக்கா தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதேச செயலகத்தின் திட்டமிடல் பணிப்பாளர், விவசாய உத்தியோகத்தர்கள், கமநலசேவை காரியாலய பிரதம இலிகிதர் ஐ.எல்.ஏ.அஸீஸ், விவசாயிகளின் தலைவர் ஐ.எல்.ஏ.மஜீத் மற்றும் பிரதேச விவசாயிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.




# FIFA WORLD CUP - 2022



## துனிசியாவை வீழ்த்தி நொக் அவுட் சுற்று வாய்ப்பை பெற்ற ஆஸி.

நேற்று முன்தினம் நடைபெற்ற முதல் ஆட்டத்தில் 'குழு டி' பிரிவில் இடம்பெற்றுள்ள ஆஸி (தரவரிசையில் 38ஆவது) – துனிசியா (தரவரிசையில் 30) அணிகள் பலப்பரீட்சை நடத்தின. இந்த ஆட்டத்தில் துனிசியாவை 1-0 என்ற கோல் கணக்கில் வீழ்த்தியதின் மூலம் நொக்அவுட் சுற்று வாய்ப்பை ஆஸி. அணி தக்கவைத்தது.

முதல் ஆட்டத்தில் உலக சம்பியன் பிரான்ஸிடம் 1-4 என தோல்வியைத் தழுவிய ஆஸி. அணி, கட்டாய வெற்றியை நோக்கி



களமிறங்கியது. முதல் பாதி ஆட்டத்தில் ஆஸி. அணி வீரர்களே முழு ஆதிக்கம் செலுத்தினர். போட்டியின் 23ஆவது நிமிடத்தில் குட்வின் கடத்தி அனுப்பிய பாஸை, தலையால் முட்டி அற்புதமாக கோலாக்கினார் மிச்சல் டியூக். பின்னர் பதிலுக்கு கோல் அடிக்க துனிசியா தரப்பு மேற்கொண்ட முயற்சிகளை ஆஸி. கோல் கீப்பர் மேட்டி ராயன் முறியடித்தார்.

துனிசிய வீரர் ஜபால் அடித்த பாஸின் மூலம் எளிதாக கோலடிக்கும் வாய்ப்பை தவறவிட்டார் எம்சாக்னி. கோல் போஸ்ட்டை விட்டு தொலைவில் சென்றுவிட்டது பந்து. இறுதியில் முதல் பாதி முடிவில் 1-0 என ஆஸி. முன்னிலை வகித்தது. இரண்டாம் பாதியில் துனிசியா ஆதிக்கம் செலுத்தியது. ஆனால், அதன் கோல் போடும் முயற்சிகள் பலன் தரவில்லை. 72ஆவது நிமிடத்தில் ஆஸி. வீரர் மெக்லாரன் அனுப்பிய பந்தை தவற விட்டார் லெக்கி. இதனால் ஆஸி. இரண்டாவது கோல் போடும் வாய்ப்பு நழுவியது. இறுதியில் 1-0 என வென்றது ஆஸி.

ஆஸி. அணி தங்களது இறுதி ஆட்டத்தில் டென்மார்க்கை வீழ்த்தினால் நொக்அவுட் சுற்றுக்குத் தகுதி பெறும் அதேவேளை, நடப்புச் சம்பியன் பிரான்ஸுடன் துனிசியா கடினமான ஆட்டத்தை ஆட வேண்டும்.

## ஆர்ஜென்ரீனாவை வீழ்த்திய சவூதிக்கு அதிர்ச்சி கொடுத்த போலந்து

'குழு சி' பிரிவில் இடம்பெற்றுள்ள சவூதி அரேபியா – போலந்து அணிகளுக்கிடையிலான முக்கிய ஆட்டம் நேற்று முன்தினம் இரண்டாவது ஆட்டமாக நடைபெற்றது. இந்த ஆட்டத்தில் சவூதி அரேபியாவை 2-0 என்ற கோல் கணக்கில் போலந்து வீழ்த்தியது.

உலக பலம் வாய்ந்த ஆர்ஜென்ரீனாவை அதிர்ச்சித் தோல்வியடைச் செய்த உற்சாகத்தில் சவூதி அரேபியா களமிறங்கியது. அதேநேரம், போலந்து முதல் ஆட்டத்தில் மெக்சிக்கோவுடன் சமநிலை செய்திருந்தது. தொடக்கம் முதலே சவூதி அரேபிய வீரர்கள் ஆதிக்கம் செலுத்தி ஆடினர். ஆனால், கோல் அடிக்கும் வாய்ப்புகளை உருவாக்க முடியவில்லை. 39ஆவது நிமிடத்தில் போலந்து வீரர் லெவன்டோவ்ஸ்கி கடத்தி அனுப்பிய பாஸை பயன்படுத்தி ஸிலின்ஸ்கி அற்புதமாக முதல் கோல் அடித்தார்.

அதன்பின்னர் சவூதி வீரர் அல்ஷெரியிடம் போலந்து வீரர் செய்த தவறினால் அற்புதமான பெனால்டி வாய்ப்பு கிடைத்தது. ஆனால், அதை அற்புதமாக தடுத்தார் போலந்து கோல் கீப்பர் செஸஸ்னி. முதல் பாதியில் 1-0 என போலந்து முன்னிலை பெற்றிருந்தது. 82ஆவது நிமிடத்தில் சவூதி வீரர் அல்மாலிகி செய்த தவறைப் பயன்படுத்தி பந்தை தன்வசப்படுத்தி அணிக்காக இரண்டாவது கோலை அடித்தார் நட்சத்திர வீரர் லெவன்டோவ்ஸ்கி. அதன்பின் கோல் போட இரு அணிகள் முயன்றும் முடியவில்லை. இறுதியில் 2-0 என வென்றது போலந்து.

சவூதி அரேபியாவுக்கு மெக்ஸிகோவுடனான ஆட்டமும், போலந்திற்கு ஆர்ஜென்ரீனாவுடனான ஆட்டமும் எஞ்சியிருக்கின்றன. இதில் சவூதி அரேபியா வெற்றிபெற்றால் அடுத்த நொக் அவுட் சுற்றுக்கான வாய்ப்பு காணப்படும்.

## முதல் அணியாக நொக்அவுட் சுற்றுக்குள் நுழைந்த நடப்பு சம்பியன் பிரான்ஸ்

'குழு டி' பிரிவில் இடம்பெற்றுள்ள நடப்பு சம்பியன் பிரான்ஸ் - டென்மார்க் அணிகளுக்கிடையிலான ஆட்டம் நேற்று முன்தினம் மூன்றாவது போட்டியாக நடைபெற்றது. விறுவிறுப்பாக நடைபெற்ற இந்த ஆட்டத்தின் முதல் பாதி முடிவில் இரு அணிகளும் கோல் எதுவும் அடிக்கவில்லை.



இரண்டாம் பாதி ஆட்டத்தின் 61ஆவது நிமிடத்தில் பிரான்ஸ் வீரர் கைலியன் எம்பாப்பே முதல் கோல் அடித்து தனது அணியை முன்னிலை பெறச் செய்தார். இதற்கு பதிலடியாக 68ஆவது நிமிடத்தில் டென்மார்க் வீரர் ஆன்ட்ரெஸ் கிறிஸ்டென்சன் கோல் அடித்தார். இதனால் போட்டி சமநிலையை எட்டியது.

விறுவிறுப்பாக நடைபெற்றுக் கொண்டிருந்த இந்த ஆட்டத்தின் இறுதியில் 86ஆவது நிமிடத்தில் பிரான்ஸ் வீரர் கைலியன் எம்பாப்பே மீண்டும் ஒரு கோல் அடித்தார். டென்மார்க் அணி வீரர்கள் போட்டியில் கோலடிக்க முயன்ற நிறைய சந்தர்ப்பங்களை பிரான்ஸ் கோல் கீப்பர் தடுத்து நிறுத்தினார். இறுதியில் ஆட்டநேர முடிவில் 2-1 என்ற கோல் கணக்கில் பிரான்ஸ் அணி வெற்றிபெற்றது. இதன்மூலம் 'டி' பிரிவில் அந்த அணி முதலிடம் பிடித்ததுடன், அடுத்த சுற்றான நொக்அவுட் சுற்றுக்கு முதல் அணியாக தகுதிபெற்றது.

## தோல்வியின் பின்னர் வெற்றிப்பாதைக்கு திரும்பிய ஆர்ஜென்ரீனா



ஆர்ஜென்ரீனா - மெக்சிக்கோ அணிகளுக்கிடையிலான பரபரப்பான ஆட்டத்தில் 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டிய ஆர்ஜென்ரீனா அணி, சவூதி அரேபிய அணியுடனான தோல்வியிலிருந்து மீண்டது. இந்தப் போட்டியில் நட்சத்திர வீரர் லியோனல் மெஸ்ஸி அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்தி அணிக்கு வெற்றியை தேடிக்கொடுத்தார்.

குறித்த போட்டியில் கட்டாயம் வெற்றிபெற வேண்டும் என்ற நெருக்கடியுடன் ஆர்ஜென்ரீனா அணி களமிறங்கியது. ஆட்டத்தின் முதல் பாதியில் ஆர்ஜென்ரீனா வீரர்கள் கடுமையான முயற்சிகளை மேற்கொண்டும் அது கோலாக பலன் அளிக்கவில்லை. இருப்பினும், இரண்டாவது பாதியில் மெஸ்ஸி அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்தி மெக்சிக்கோ வீரர்களுக்கு அழுத்தம் கொடுத்தார். அதன் பலனாக ஆட்டத்தின் 64ஆவது நிமிடத்தில் மெஸ்ஸி சிறப்பான கோல் ஒன்றை கோல் அடித்து அசத்தினார்.

பின்னர் 87ஆவது நிமிடத்தில் மெஸ்ஸி தனது சக வீரரான பெர்னான்டெஸுக்கு சிறப்பான அஸிஸ்ட் கொடுக்க, அதை பெர்னான்டெஸ் கோலாக மாற்றினார். இதன்மூலம் 2-0 என்ற கோல் கணக்கில் ஆர்ஜென்ரீனா வெற்றிபெற்றது. இதன் மூலம் ஆர்ஜென்ரீனா அடுத்த சுற்றுக்குத் தகுதிபெறும் வாய்ப்பை தக்கவைத்தது. ஆர்ஜென்ரீனா அணி அடுத்து போலந்தை எதிர்கொள்ளும் நிலையில், அதில் கட்டாயம் வெற்றிபெற வேண்டும் அல்லது போட்டியை சமப்படுத்தியே ஆக வேண்டும்.

### இன்றைய போட்டிகள்

- செர்பியா VS கெமரூன் (குழு-G) மாலை 3.30
- தென்கொரியா VS கானா (குழு H) மாலை 6.30
- பிரேசில் VS சுவிட்ஸர்லாந்து (குழு G) இரவு 9.30
- போர்த்துக்கல் VS உருகுவே (குழு H) நள்ளிரவு 12.30

FIFA WORLD CUP Qatar2022

## பிரேஸிலுக்கு மிகப்பெரிய இடி



பீபா உலகக்கிண்ணத் தொடரில் கடந்த வியாழக்கிழமை செர்பியாவுக்கு எதிராக விளையாடும்போது பிரேஸிலின் பிரபல நட்சத்திர வீரர் நெய்மருக்குக் காயம் ஏற்பட்டது. இதையடுத்து முதல் ஆட்டத்தில் காயமடைந்த நெய்மர் மற்றும் டேனிலோ ஆகிய இருவரும் இன்று நடைபெறும் சுவிட்சர்லாந்துக்கு எதிரான ஆட்டத்தில் பங்கேற்க மாட்டார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், இருவரும் கடைசி ஆட்டத்தில் பங்கேற்கவும் வாய்ப்பில்லை என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. இதனால் மீதமுள்ள ஆட்டங்களில் நெய்மர் இல்லாமல் விளையாடவுள்ளது பிரேஸில் அணி. இருவருக்கும் கணுக்காலில் காயம் ஏற்பட்டுள்ளதால் அதற்கான சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

## மென்பந்து கிரிக்கெட் சுற்றுத்தொடரை தியாவட்டவான் அர்ரஷாத் அணி சுவீகரிப்பு

*(மீராவோடை நிருபர்)*

கோறளைப்பற்று மத்தி, வாழைச்சேனை பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட தியாவட்டவான் அர்ரஷாத் விளையாட்டுக் கழகம் நடத்திய மென்பந்து கிரிக்கெட் சுற்றுத்தொடரை தியாவட்டவன் அர்ரஷாத் அணி சுவீகரித்துக் கொண்டுள்ளது.

12 அணிகள் பங்குபற்றிய இத்தொடரின் இறுதிப்போட்டி அண்மையில் தியாவட்டவன் அரஃபா வித்தியாலய மைதானத்தில் இடம்பெற்றது. இறுதிப்போட்டியில் தியாவட்டவான் அர்ரஷாத் ஏ மற்றும் அர்ரஷாத் பி அணிகள் மோதின.

இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய அர்ரஷாத் ஏ அணி ஐந்து ஓவர்கள் முடிவில் இரண்டு விக்கெட்டுகளை இழந்து 61 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடியே அர்ரஷாத் பி அணி ஆறு விக்கெட்டுகளை இழந்து 42 ஓட்டங்களைப் பெற்று தோல்வியடைந்தது.



தியாவட்டவான் அர்ரஷாத் விளையாட்டுக கழகத்தின் தலைவர் ஏ.எம்.ஹலீம் தலைமையில் இடம்பெற்ற இறுதிப்போட்டி நிகழ்வில் அதிதிகளாக கோறளைப்பற்று மத்தி, வாழச்சேனை பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் எம்.எச்.எம்.றுவைத், தியாவட்டவன் அரஃபா வித்யாலயத்தின் அதிபர் ஏ.எல்.இஸ்மாயில், ஹாலித் பின் வலி ஜும்மா பள்ளிவாசல் தலைவரும் சமூகச் செயற்பாட்டருமான முஹம்மத் பௌஸ்தீன் ஆகியோர் கலந்துகொண்டு கிண்ணங்களை வழங்கினர்.

வெற்றிக்கிண்ணங்களுக்கான அனுசரணையை சட்டத்தரணிகளான ஹபீப் றிபான், எம்.எச்.எம். றம்ஸீன் ஆகியோர் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.


# Job Vacancies



### Onboarding and Training Manager

@v dlkqplot sdc bnl o mx hmsgd bnmr sqt bshmr dbsnq-

dx dpt hqpll dmsr-

- Sn qplbqt hs, nman qc, sq hm mc dmg mbd bnl odsdmbhdr nev nq endpd
- k m, r bgdct kd mc Hi okdl dms sq hmhmf oqnf q l r mc oqplo qpl at cf dsr
- L hms hm cds hkdc c s a r d ne sgd sq hmdc v nq endpd
- Kh hrd v hsg r t ookhdq enq sdbgmhb k r r hrs mbd enq sq hmhmf oqnf q l r mc bdqshehb shnm v hsg qplf t k qt oc sdr
- l okdl dms sq hmhmf 'r enq chedqplms sq cdr

B mchc sd oqnehkd

- 0/ -04 xd q hmsgd bnmr sqt bshnm hmct r sqx
- qnudmsq b qplbnqc nel dmsnqhmf, sq hmhmf mc kd chmf v nq dqr mc oqnedrr hnm kr
- nnc bnms bs a r d ne v nq endpd hm chedqplms sq cdr
- @ahkhsx sn enq mc kd c sd l r hm dwdbt shnm
- nnc bnl l t mhb shnm r hkkr hm Dmf khr g mc Rhmg k . S l hk
- Rdmr d ne nv mdqr ghp, f nnc sh d l m f dl dms r hkkr mc dwbdkkdms kd cdq ghp mc kd cdq ghp r hkkr -
- nnc mv kdcf d hm cu mbdc Dwbdk-

### Cluster Manager

@v dlkqplot sdc bnl o mx hmsgd bnmr sqt bshmr dbsnq-

dx dr onmr hahkhshdr

- k mmhmf dudqxsghmf enq dwdbt shnmsn cdkhudqx
- Cdkdf shmf v nq deedbshudkx
- Bnl okdshmf s r hmsgd cdkdf sdc at cf ds
- L mmhmf l monv dq l sdqh k mc sh d qplbnt qr dr deedbshudkx
- L nmhsnqhmf oqnf q l r mc sq b qn c aknb r
- dbqt hs mc r t odqulhr d r hsd dmf hmddqr
- l okdl dms r
- L d r hsd uhr hsr hm b r d ne dr b k shnmr mc qplr nkud mx hr r t dr s g mc

B mchc sd qnehkd

- 0/ -04 xd q hmsgd bnmr sqt bshnm hmct r sqx
- qnudmsq b qplbnqc nel dmsnqhmf, sq hmhmf mc kd chmf v nq dqr mc oqnedrr hnm kr
- nnc bnms bs a r d ne v nq endpd hm chedqplms sq cdr
- @ahkhsx sn enq mc kd c sd l r hm dwdbt shnm
- nnc bnl l t mhb shnm r hkkr hm Dmf khr g mc Rhmg k . S l hk
- A r hb bnl ot sdq mv kdcf d hr qplpt hqplc

@m ssq bshud qpll t mdq shnm o b f d v hsr sgd hcd kb mchc sd-

### Sales Manager

@v dlkqplot sdc bnl o mx hmsgd bnmr sqt bshmr dbsnq-

dx dr onmr hahkhshdr

- L ddshmf sgd r kdr s qf ds ne sgd nqf mhy shnm
- Rdkkhmf oqnct bs mc r dqulhbdr sn bt r snl dqr
- dqpnq hmf bnr s- admdeht m kxr hr ne onsdmsh k mc dwhr shmf bt r snl dqr
- L o onsdmsh k bt r snl dqr mc f dmdq sd kd cr mc noonqst mhshdr enq sgd nqf mhy shnm
- Rds r enq sgd r kdr sd l
- @m kxyd sdqplsnqx mc l q ds onsdmsh k, sq b r kdr mc r s st r qplonqs
- Rt ookx l m f dl dms mc v hsg qplonqsr nm bt r snl dq mddcr, oqnakdl r mc hmsdqplr s
- Dwodchsd qplr nkt shnmr enq bt r snl dq oqnakdl r mc l hms hm bkhdms bdmsqhbhsx

B mchc sd qnehkd

- 0/- 04 xd q' dwoddqhdmbd hm r kdr mc l m f dl dms qnkd hm at hkchmf l sdqh kr
- qnudm sq b qplbnqc nel ddshmf r kdr s qf dsr mc kd chmf sd l r
- nnc bnms bs a r d v hsg odnokd hm sgd bnmr sqt bshnm hmct r sqx
- Dwbdkkdms hmsdqpdqr nm kr hkkr mc bnl l t mhb shnm r hkkr hm Dmf khr g mc Rhmg k . S l hk
- Dwbdkkdms bnnqc hm shnm ahkhsx mc cdbhr hnm-l hmf r hkkr

@m ssq bshud qpll t mdq shnm o b f d v hsr sgd hcd kb mchc sd-

msdqplr sdc b mchc sdr b m ookx a x r dmchmf sgdhq B r sn qplbqt hsl dms abnmmdbsdc f l hkbnl

Bnms bst r nm +83 665 260 023 +83 666217 012-

ABnmmdbsdc ( us) Ksc-

Mn9/6, R dksnm qcdmr,

Bnknl an /4-


Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7